உ



நெற்குப்பை
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
திருக்குட நன்னீராட்டு விழா மலர் 2012


நந்தன ஆண்டு வைகாசி திங்கள் 12ம் நாள்

25.05.2012 வெள்ளிக்கிழமை

உ

நெற்குப்பை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டு விழா மலர் 2012



மு. திருநாவுக்கரசு
தொகுப்பாசிரியர்,
திருக்குட நன்னீராட்டு மலர் 2012,
2, ராம. சா. வீதி, நெற்குப்பை - 630 405
செல் : 98944 75836

மலர் வெளியீட்டு நாள் :
விஜய ஆண்டு சித்திரைத் திங்கள் முதல் நாள்
14.04.2013 ஞாயிற்றுக்கிழமை

design - print
Bhaarathi Digital Printerss
04364 - 220640, Mayiladuthurai

இறை காப்பு

புன்னகைசெய் தமிழ்முருகன்
பொலிவுடைய திருமுகத்தைப்
போற்றி சொலிப் பார்த்ததுமே,
நன்மையெலாம் விளைந்திடுமே
நற்பலன்கள் கைகூடும்
நற்செல்வம் செழித்தோங்கும் !

கன்னியர்க்கு மணம் முடியும்
கல்வி நலம் சிறந்தோங்கும்
கருதியவை வந்தடையும்
பொன்குவியும் நெற்குப்பைப்
புகழ்பெருக்கும் திருமுருகன்
பொற்பாதம் வாழியவே !

கற்கண்டு கண்டதுண்டு
முருகனருள் காட்சியிலே
கவின் வள்ளி தெய்வானை
பொற்புடைய துணையிருவர்
பொலிவுமிகப் பார்த்ததுண்டு
பூரித்து மகிழ்ந்த துண்டு

நெற்குப்பை சிறப்புதவன்
நிழலில் என நினைத்ததுண்டு
நெஞ்சுருகி நின்றதுண்டு
அற்புதம் செய் நகரத்தார்
அழகன் இரு தாள் பணிவோம்
அவனருளால் வாழியவே !



முன்னுரை



மு. திருநாவுக்கரசு,
செயலாளர்,
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்,
திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 2012 மலர்க்குழு
மற்றும் பொறுப்பாளர், விழாக்குழு, நெற்குப்பை

அன்புசால் நெற்குப்பை நகரத்தார் பெருமக்கட்கு,

வணக்கம். திருக்குட நன்னீராட்டுப் பணிகள் பற்றிய அறிக்கையை தங்கள் முன் வைப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

விழாக்குழுப் பணிகள் :—

நெற்குப்பை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நாளது (25-5-2012) வெள்ளிக் கிழமை காலை 9.30 மணி அளவில் நல்லோரையில் இனிதே நிறைவெய்தியது. மேல வட்டகை நகரத்தார் பெருமக்கள் மற்றும் உள்ளூர் நகரத்தார் – நாட்டார் உட்பட அனைவரும் பெருமளவில் கண்டு களித்து இன்புற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்தப் பெருவிழாவை சிறப்புற நடத்தி நிறைவு செய்ய நெற்குப்பை நகரத்தார் சங்கத்தின் 22.5.2011 நடந்த பேரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பெற்று நிதி திரட்டுவதற்கும் ஏனைய ஆயத்தப் பணிகளைச் செவ்வனே செய்யவும் (நகரத்தார் சங்க செயலாளர் உட்பட) 12 பேர் கொண்ட விழாக்குழு ஒன்றினையும் எண்மர் கொண்ட மலர்க்குழு ஒன்றினையும் தேர்வு செய்து பொறுப்புகள் ஒப்படைக்கப் பெற்றன.

நிதி வசூல் நல்ல முறையில் நிறைவேறிக் கொண்டிருந்ததால் நாளது 30.1.2012 கூடிய பேரவைக் கூட்டத்தில் நமது அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் திருக்குட நன்னீராட்டு விழாவினை 25.05.2012 வெள்ளிகிழமை காலை மணி 9.30க்கு மேல் 10.30 அளவில் சிறப்புற நடத்துவது எனத் தீர்மானிக்கப் பெற்று வேலைகள் துவங்கப் பெற்றன. அந்தக் கூட்டத்தில் எந்தெந்தக் கோவில் / கரையினருக்கு எந்தெந்தப் பணிகள் எனக் குடஓலை முறையில் அருள்மிகு முருகன் திருமுன் 10 கோவில் பிரிவினர்க்கு பணிகள் பிரிக்கப்பட்டு ஒப்படைக்கப் பெற்றது.

இரண்டு குழுவிற்குமே முறையே பொறுப்பாளராகவும், செயலாளராகவும் அடியேனைத் தேர்வு செய்து நம்பிக்கையை விதைத்த நெற்குப்பை நகரத்தார் பெருமக்கட்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பணியினைச் சிரமேற்கொண்டு கண்ணியத்தோடும் கடமையுணர்வுடனும் நிறைவேற்றி நிறைவு செய்திருக்கிறேன் என்று நம்புகிறேன். 06.06.2011 துவங்கப்பட்ட விழாக்குழு வேலைகள் இந்த 2012ம்



ஆண்டு டிசம்பரில் நிறைவடைந்தது. அதே போல் மலர்க்குழு வேலைகளும் 19.09.2011 ல் துவங்கி இந்த 2013 மார்ச் மாதத்தில் தான் நிறைவடைகிறது. ஏறத்தாழ 1½ ஆண்டுகளில் விழாக்குழு ஏறக்குறைய 53 லட்சம் ரூபாயை நிதியாகத் திரட்டித்தந்திருக்கிறது. இந்தப் பணியில் முனைப்புடன் செயல்பட்ட நெற்குப்பை நகரத்தார் பெருமக்கள் அனைவரின் பங்கும் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

விழாக்குழுவினர், பி.அளகாபுரியைச் சேர்ந்த ஸ்தபதி திரு. R. கண்ணன் என்பவரைக் கோபுரங்களுக்கு புத்துயிர் ஊட்டி வண்ணஞ் சேர்க்கக் குத்தகை பேசி நியமித்தனர். பார்த்தோர் போற்றும் வண்ணம் அதை நிறைவேற்றியமைக்கு அவர் பாராட்டுப் பெறுகிறார். மேலும் அவர் மகாமண்டப விதானத்தில் புதிதாக அருள்மிகு முருகப்பெருமான் திரு உருவத்தை அழகுற அமைத்துத் தந்தார். அந்த மண்டபத்தில் கூரை ஓரங்களில் 4 பக்கங்களிலும் பலவண்ணங்களில் தோரணக் கொடிகளையும் அழகுற வரைந்து தந்தார். அதற்கு ரூ.4.25 லட்சம் செலவாயிற்று. அது போன்றே அக்ரஹாரத்தில் தளம் 1 க்கு 550 ச.அடி வீதம் முதற்தளம் உட்பட 1100 ச.அடியில் ஊழியர் குடியிருப்பினை ரூ12.00 லட்சம் குத்தகையில் அழகுறக் கட்டித் தந்த பொறியாளர் வலையபட்டி திரு அண. வயிரவன் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். இந்தக் கட்டிடத்திற்கு வழி செய்யும் பொருட்டு ஏற்கனவே அந்த இடத்தில் இருந்த ஓட்டு வாரம், வேப்பமரம் ஆகியன நீக்கப்பட்டு வழி வகை செய்யப்பட்டது. அதுவன்றி கோவில் மதில் சுவர்கள் பழுது பார்த்து சீர் செய்யப் பெற்றது. மேலும் கோவிலில் ராஜ கோபுரத்திற்கு முன்புறம் வடக்குச் சுவரில் சேர்த்து அமைந்திருந்த சீமை ஓட்டு வாரத்தை மேங்கோப்புகளை நீக்கி தளத்தை சீர் செய்து சிமெண்ட் பூசி அந்த வளாகத்தில் பொருத்தியிருந்த மின்இணைப்புகளையும் மாற்றி சரி செய்யப்பட்டது. மேற்புறச் சுவரையொட்டி அமைந்திருக்கும் அருள்மிகு

1. இரட்டை விநாயகர்
2. விசுவநாதர் – விசாலாட்சி
3. உற்சவமூர்த்திகள்
4. மகாலெட்சுமி
5. தண்டாயுதபாணி

திருவறைகள் அனைத்திலும் பழைய பளிங்குகள் மாற்றப் பெற்று புதிய வெண்பளிங்குகள் பதிக்கப்பட்டு புத்துயிர் ஊட்டப் பெற்றன. புதிதாகக் கட்டப் பெற்ற ஊழியர் குடியிருப்பிற்கு முன் அமைந்த ஆழ் குழாய்க் கிணற்றில் பொருத்தப் பட்டிருந்த மோட்டார் பழுதடைந்ததால் புதிதாக ஒரு மோட்டார் வாங்கிப் பொருத்தி சரி செய்யப் பெற்றது. நமது கோவில் வளாகத்தில் வாடகைக்கு விடப்பட்டிருக்கும் அஞ்சல் அலுவலகத்தின் தெற்கு மேற்குச் சுவர்களில் இருந்த கதவுகள் நீக்கப்பட்டு அவற்றை செங்கல் சுவர் வைத்து அடைத்துப் பூசிச் சரி செய்யப்பட்டது.

மேலும் அக்ரஹாரத்தில் யாகசாலை அமைக்க முடிவு செய்யப்பெற்றதால் அதில் சிதிலமாக நின்ற சுவர்களை இடித்து பட்டியல் கற்கள் அகற்றப்பட்டு தளம் மட்டப் படுத்தப்பட்டது. கோவில் மேல் தளத்தில் உடைந்திருந்த ஆனை அடிக்கற்கள் அகற்றப்பட்டு தேவையான இடங்களில் புதிய கல் போட்டு தளம் சீர் செய்யப் பெற்றது.

சொர்க்க ரத அறையைவிட சாலை உயரமாகி விட்டதால் அந்த அறையின் தளத்தை உயர்த்தி ரோட்டை இணைக்கப் பாலம் போல் சிமெண்ட்

தகடுகள் பொருத்தப்பட்டன. முதியோர் இல்லம் இருக்கும் நகர விடுதிக் கட்டிடத்தின் மேல்தளத்திலும் சிமெண்ட் தூண்கள் கைப்பிடிச்சுவர்கள் விரிசல் அடைந்தவற்றையும் ஆனை அடிக்கல் போன்றவற்றையும் மாற்றி அமைத்துச் சீர் செய்யப்பட்டது. நகரத்தார் சங்க கட்டிடத்தின் முன்புறம் தூண்கள் சிமெண்ட் கிராதிகள் பழுது பார்க்கப்பட்டு சீர் செய்யப் பெற்றது. நகர மடத்தின் மேல் தளத்தில் இருந்து விழும் மழை நீருக்கு வடிகால் குழாய்கள் அமைக்கப்பட்டன. உற்சவ மூர்த்திகளுக்கு முன் உள்ள மரக் கதவுகள் பழுதடைந்து விட்டதால் அவற்றிற்குப் பதிலாக இரும்பு கிரில்கள், கதவுகள் அமைக்கப்பட்டன. வடக்கு மண்டபத்தில் உள்ள கண்ணாடி அடைப்புகளில் பல கண்ணாடிகள் இல்லாது இருந்தன. அந்த இடங்களில் புதியன பொருத்தப்பட்டு சீர் செய்யப்பட்டது. கோவில் தெற்கு மதில் சுவரை ஒட்டிய வாகன அறையில் புதிதாகத் தளம் போடப்பட்டு சீர் செய்யப் பெற்றது. வாடகைச் சமையல் சாமான் அறை முன் இருந்த மரக்கதவு நிலைகள் பழுதடைந்து விட்டதால் புதிதாக இரும்புக்கதவுகள் செய்து பொருத்தப்பட்டது. தோட்டத்தில் இருந்து கோவிலுக்கு உள்ளே வரும் தண்ணீர்க் குழாய்கள் அனைத்தும் புதிதாகப் பொறுத்தப்பட்டு சரி செய்யப் பெற்றது. இவை தவிர கோவில் சுவர்கள், அறைகள், நகர மட வெளிப்புறச் சுவர்கள், நகர விடுதியின் அனைத்து அறைகள், வெளிப்புறச்சுவர்கள், பழைய குடியிருப்புகளின் வெளிச்சுவர்கள் முழுவதும் புதிய வண்ணங்கள் சேர்க்கப்பட்டு புத்துயிர் ஊட்டப்பெற்றது. வரவேற்பு வளைவும் அதற்கு அடியில் உள்ள மதில் சுவர்களும் புதிய வண்ணம் பூசப்பட்டு உயிரூட்டப்பட்டன. இடும்பன் சுவாமிகளின் வேல் பீடத்தில் பழைய வேல் சேதமானதால் புதிய வேல் அமைக்கப்பெற்றது.

நமது உற்சவ மூர்த்திகள் வரிசையில் புதிதாக கொலுவீற்றிருக்கும் அருள்மிகு சிவபெருமான், பிரியாவிடை, முருகன், தனிஅம்மன் உள்ளிட்ட சோமாஸ்கந்தர் எனப்படும் திருவுருவங்களை நமது ஊர் கிங்கிணிக்கூருடையார் திரு. சுப. சாத்தப்பன் அவர்களும் நமது ஊரில் பிறந்து வேகுப்பட்டியில் திருமணமாகி சிறப்புற வாழ்ந்து வரும் வள்ளியம்மை சுந்தரம் ஆச்சி அவர்களும் இணைந்து கோவிலுக்கு நன்கொடையாகத் தந்தமை பாராட்டுக்குரியது. திருக்குட நன்னீராட்டு விழா நாளன்று இரவு ஸ்ரீ சோமாஸ்கந்தர் திருமூர்த்திகள் வீதி உலாவில் சேர்க்கப் பெற்று மக்களுக்கு அருள்பாலித்தனர்.

சூரிய ஒளி மின்சார இயந்திரங்களை உயர்திரு. ந.பழ.மு.ந.தி. கனகசபை செட்டியார், தி. சிதம்பரம் செட்டியார் மற்றும் அமரர் தி.முத்துராமன் செட்டியார் குடும்பத்தினர் ரூ. 1.12 லட்சம் செலவில் நன்கொடையாக வாங்கித் தந்தது பாராட்டுக்குரியது. அவை செயல்படத் துவங்கிய திலிருந்து இரவில் கோவில் விளக்குகள் எந்தச் செலவுமின்றி மின்தடையுமின்றி ஒளிர்கின்றன.

திருக்குட நன்னீராட்டு விழாவின் போது சிறந்த முறையில் வீடியோ மற்றும் புகைப்படங்கள் எடுத்து உதவிய பேராளர்கள் உலகம்பட்டி திரு. லெ. நாராயணன் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர்க்கும், நெற்குப்பை மகாலெட்சுமி ஸ்டுடியோ திரு. ச. பழனியப்பன் ஆகியோர்க்கும் நமது பாராட்டும் நன்றியும் உரித்தாகுக. இதில் சிறப்பம்சம் திரு. லெ. நாராயணன்/ சுப்பிரமணியன் ஆகியோர் கட்டணம் எதுவும் பெற்றுக் கொள்ளாதது தான்.

நமது கோவில் ஊழியர் குடியிருப்புக் கட்டிட நிதிக்கும் நன்னீராட்டு விழா நிதிக்கும்



ரூ.50,000மும் அதற்கு மேலும் நன்கொடை தந்த பெருமக்கள் அனைவரும் விழாவன்று பாராட்டப்பட்டு பொன்னாடை அணிவிக்கப் பெற்றார்கள். அவர்களுக்கு நினைவுப் பரிசுகளும் வழங்கப் பெற்றது. மேலும் அவர்கள் பெயர்கள் அடங்கிய கல்வெட்டும் 17.01.2013 அன்று கோவில் வளாகத்தில் பதிக்கப்பெற்றுச் சிறப்புச் செய்யப் பெற்றது.

22.05.2011 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்ற குழு அக்டோபர் 2011 லிருந்து புதிதாகப் பொறுப்பேற்ற சங்கச் செயலாளர்களான திரு.ந.பழனியப்பன் மற்றும் திரு. சி. காந்தி இருவரும் செயலாளர்கள் என்ற அடிப்படையில் சேர்த்து கொள்ளப் பெற்ற பின் விழாக்குழு உறுப்பினர் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தது. மேலும் புள்ளி வரி / நன்கொடைகளை அந்தந்தப் பங்காளிகளிடமிருந்து வசூலிக்க உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

அதை அனைத்துக் கோவில் பிரிவினரும் நல்ல ஒத்துழைப்புத் தந்து வசூல் செய்து தந்தார்கள். அந்த வகையில் சீரிய பணி ஆற்றிய விழாக்குழு உறுப்பினர்களான பெருமக்கள் கீழ்வருமாறு.

1. திரு. தி. கனகசபை செட்டியார்
2. திரு. சிவ ரத்தின சபாபதி செட்டியார்
3. திரு. லெ. முத்துக்கருப்பன் செட்டியார்
4. திரு.சுப.சுப்ரமணியம் செட்டியார்
5. திரு. அண. அருணாசலம் செட்டியார்
6. திரு. மு. திருநாவுக்கரசு செட்டியார்
7. திரு. பழ. சுப்பையா செட்டியார்
8. திரு. பழ வயிரவன் செட்டியார்
9. திரு. சா. முத்துராமன் செட்டியார்
10. திரு.ராம.சாத்தப்பன் செட்டியார்
11. திரு. ராம. பழனியப்பன் செட்டியார்
12. திரு. செ. சிங்காரம் செட்டியார்
13. சுப. பழனியப்பன் செட்டியார்
14. திரு. அண. செல்வம் செட்டியார்.

மலருக்கு ரூ.6 லட்சம் அளவிற்கு விளம்பரம் வாங்கித் தந்த பெருமக்கள் :

1. திரு. தி. சிதம்பரம் செட்டியார்
2. திரு. பழ. வயிரவன் செட்டியார்
3. திரு.ச.முத்துப்பழனியப்பன் செட்டியார்
4. திரு. பழ.அ.லெட்சுமணன் செட்டியார்
5. திரு. பழ.அ. சுவாமிநாதன் செட்டியார்
6. திரு. மு. ரவிசங்கர் செட்டியார்
7. திரு. மு. இளங்கோ செட்டியார்
8. திரு.மு. திருநாவுக்கரசு செட்டியார்
9. திரு. மு. சுப்பையா செட்டியார்
10. திரு. மு. பெரியணன் செட்டியார்
11. திரு. வே. மருதப்பன் செட்டியார்
12. திரு. சேதுராமன் சாத்தப்பன் செட்டியார்
13. திரு.பனை. கௌதமன் செட்டியார்
14. திரு. அண. விஸ்வநாதன் செட்டியார்
15. திரு. ராம. சாத்தப்பன் செட்டியார்
16. திரு. கன. தியாகராஜன் செட்டியார்
17. திரு.வி. முத்துக்கருப்பன் செட்டியார்
18. திரு. லெ. ராமநாதன் செட்டியார்
19. திரு. அண. செல்வம் செட்டியார்
20. திரு. ரெ. தியாகராஜன் செட்டியார்

மேற்கூறிய அனைவரும் பெரும் பாராட்டுக் குரியவர்கள்.

நெற்குப்பை நகரத்தார் பெருமக்கள் அனைவரும் எல்லா நலமும் வளமும் பெற்று நீடுவாழ அருள்தரு வேலவப் பெருமானை நினைந்து வேண்டி அவன் திருத்தாள் பணிகிறேன்.

தங்கள் அன்பன்

மு. திருநாவுக்கரசு

பொறுப்பாளர், விழாக்குழு



திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர்ப் பணிகள்

- மலர்க்குழுக்கூட்டம் அவ்வப்போது கூட்டப் பெற்று விளம்பர நிதி வசூல் பற்றி விவாதிக்கப்பட்டது.

- விளம்பரங்கள் மூலமாக நாளது தேதி வரை ரூ. 5,65,500 வசூல் ஆகியிருக்கிறது.

- 4 அச்சகங்களில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டது. 3 பேர் மட்டும் கடிதங்கள் அனுப்பினர். அதில் குறைவாகக் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளி மயிலாடுதுறை பாரதி டிஜிட்டல் பிரிண்டர்ஸ் அவர்களுடையது. எனவே அவர்களிடம் அச்சுப்பணி ஒப்படைக்கப்பட்டது. சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த பாரதி டிஜிட்டல் பிரிண்டர்ஸ அதிபர் திரு. அருணாசலம் செட்டியார் அவர்கட்கும் அவரது புதல்வர் அழகு மாணிக்கத்திற்கும் நமது நன்றி உரித்தாகுக.

- முக்கியப்பிரமுகர்கள் பலரிடம் ஆசியுரை கேட்டிருந்தோம். அவர்களில் சீர்வளர்சீர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள், திருப்பெருந்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மாண்பமை நீதியரசர் மு. கற்பகவிநாயகம், மீனாட்சிமைந்தர் அமரர் உயர்திரு. V. N. சிதம்பரம் செட்டியார் ஆகியோர் மனமுவந்து அளித்த ஆசியுரைகட்கு நமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

- வண்ணப்புகைப்படம் கிடைக்காததால் சில உறுப்பினர்களுக்கு பழைய கையேட்டிலிருந்து கருப்பு – வெள்ளைப் படத்தை எடுத்துப் போட்டிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

- நமது உள்ளூர் நகரத்தார் பெருமக்கள் பலரும் கட்டுரை, கவிதைகள், சிறுகுறிப்புகள் தந்து உதவியிருக்கிறார்கள். மலர்க்குழுத் தலைவர் தொல்காப்பியச்செம்மல் முனைவர். திரு தமிழண்ணல், திரு ராம. விசுவநாதன் செட்டியார், திரு திருவாசகத்தெள்ளமுது கரு. சுந்தரம் செட்டியார், திரு.பழ. வயிரவன் செட்டியார், திரு. சேதுராமன் சாத்தப்பன், திரு. மு. பெரியண்ணன் செட்டியார், ஜோதிட திலகம் சுப. சுப்ரமணியன் செட்டியார் ஆகியோரின் கட்டுரைகள் / கவிதைகட்கு நமது நகரத்தார் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எளியோனின் கட்டுரைகள், கவிதைகட்கும் தங்களின் பேராதரவை எதிர்நோக்கும்

அன்பன்
மு. திருநாவுக்கரசு
செயலாளர், மலர்க்குழு

பொருளடக்கம்

திருக்குட நன்னீராட்டு நடைமுறை நிகழ்வு

நெற்குப்பை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நாளது நந்தன வைகாசித் திங்கள் 12ம் நாள் (25.5.2012) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி அளவில் சீரும் சிறப்புமாக நிறைவெய்தியது.

23.5.2012 மாலை 7.00 மணி அளவில் முதற்கால வேள்வி திரு ராஜாபட்டர் (திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவில் 2ம் ஸ்தானிகர்) சீரிய தலைமையில் 40க்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்கள் வேதம் ஓத மங்கல வாத்தியங்கள் முழங்க, சுடர் வழிபாட்டுடன் துவங்கப்பெற்றது. 24.5.12 காலை மாலை இருவேளையும் அதுபோலவே இரண்டாம், மூன்றாம் காலவேள்விகளும் நன்முறையில் நிறைவேறியது. 25.5.12 காலை 9 மணி அளவில் நான்காம் கால வேள்வி சிறப்புற நிறைவெய்தியதை அடுத்து திருக்குடங்கள் மேலே கோபுரங்களுக்கு திருராஜா பட்டர் தலைமையில் எடுத்துச் செல்லப் பெற்று திருக்குட நன்னீராட்டு கோபுரங்களுக்குச் செய்யப்பெற்று பெருஞ்சுடர் வழிபாடும் செய்யப் பெற்றது. ஆயிரக்கணக்கான பக்த சிரோன் மணிகள் நன்னீராட்டையும், பெருஞ்சுடர் வழிபாட்டையும் கண்ணுற்று தங்கள் வாழ்வில் பெரும் பேறு அடைந்தன்ன மகிழ்ந்தனர்.

24.5.2012 & 25.5.2012 ஆகிய 2 நாட்களும் ஒவ்வொரு நாளும் காலை மதியம், இரவு ஆகிய 3 வேளைகளும் அனைத்து மக்கட்கும் அறுசுவை விருந்தளிக்கப்பட்டது.

பெரும் பொருட்செலவில் கோவில் கோபுரங்களும், சன்னிதானங்கள் மற்றும் சுவர்கள், கோவில் நிர்வாக அலுவலகம், நகர விடுதி, ஊழியர்கள் குடியிருப்பு, புதிய வண்ணம் பூசப் பெற்று புத்தொளி பெற்றன. கோபுர சுதைவேலைப்பாடுகளை பி. அழகாபுரி R. கண்ணன் ஸ்தபதி நல்ல முறையில் நிறைவேற்றியமைக்கு அவர் பாராட்டுக்குரியவர். நன்னீராட்டு பணிகளை முடிக்க நகரத்தார்கள் 10 துறைகளாகப் பிரிக்கப்பட்டு ஒன்று அல்லது இரண்டு கோவில் நகரக் கரைகளைச் சேர்த்து ஒரு குழுவாக அமைத்து அவர்களிடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டு பணிகள் சிறப்பாக நிறைவெய்தின.

மக்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் கோவிலும் கோபுரங்களும், யாகசாலையும், சுருங்கச் சொல்லின் கோவில் வளாகமே வண்ணமய ஒளியில் தகத்தகாய மானது. சொல்லேர் உழவர் 'சுகி சிவம்' அவர்கள் முருகு தரிசனம் என்ற நல்ல கருத்தாழ மிக்க பேருரை ஆற்றியது, போற்றுதற்குரியது. அதேபோல் மண்ணின்மைந்தர் முனைவர் தமிழண்ணலின் சீரிய தலைமையில் 'ஆறுபடை வீட்டின் அற்புதப் பெருமைகள்' என்ற அருமையான தலைப்பில் திரு சொ. சொ. மீ. சுந்தரம், திரு. தா. கு. சுப்ரமணியம், திருமதி விசாலாட்சி சுப்ரமணியம் ஆகியோர் ஒவ்வொருவரும் ஆளுக்கு 2 படை வீடுகளை

கைக்கொண்டு சிறப்பாக உரையாற்றி மகிழ்வித்தார்கள், இன்னிசை நிகழ்ச்சிகளும் காதுக்கினிய கீதங்களை இசைத்து நல்வாழ்த்துப் பெற்றன. நகைச்சுவை நிகழ்ச்சிகளும் இனிதே நிறைவேறின. நாவுக்கரசி, திருமதி இளம்பிறை மணிமாறன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தியது அனைவர்க்கும் இனிய அனுபவமாக இருந்தது. முத்தாய்ப்பாக 25.05.12 காலை 10 மணியளவில் நன்னீராட்டுப் பணிகளைச் சிறப்புறச் செய்து முடித்த நெற்குப்பை நகரத்தார் பெருமக்கட்கும் வள்ளல் பாரியின் வழித் தோன்றல்களா! என ஐயுறும் வகையில் நன்கொடைகளை வாரி வழங்கிய நெற்குப்பை நகரத்தார் பெருமக்கட்கும் தவத்திரு சீர்வளர்சீர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள் முன்னிலையில் பாராட்டுச் செய்து பொன்னாடை அணிவித்துச் சிறப்புச் செய்யப்பெற்றது. சிறப்பு விருந்தினராக வந்து மேடையை தன்வசப்படுத்திய பூலாங்குறிச்சி நகர் பெற்ற பெருந்தொழிலதிபரும் சேலம் "சோனா" அவர்கள் திருமகனாரும், தொழில் வேந்தர் கருமுத்து தியாகராசச் செட்டியாரின் பேரனுமான உயர்திரு சொ. வள்ளியப்ப செட்டியார் அவர்கள் பேருரை ஆற்றிச் சிறப்பித்தார்கள். கோவிலூர் சுவாமிகள் முன் அவர் வைத்த 2 வேண்டுகோள்கள். நகரத்தாரின் புனர்வாழ்வுக் கானவை "1) வளர்ந்து வரும் மணமுறிவுக்கான ஒரு தீர்வு 2) இரணிக்கோவிலையும், பிள்ளையார்பட்டிக் கோவிலையும் ஒட்டிப் பிறந்தவைகளாகக் கணக்கிடப்படுவதை விடுத்து அவர்கள் தனித்தனி அணியாகக் கருதப்பட்டு திருமண சம்பந்தங்களை மேற்கொள்ள வழி வகுப்பது." இரண்டு வேண்டுகோள்களுமே தொலை நோக்குப் பார்வை யுடையவை. இது திரு. சொ. வ. அவர்கள் நகரத்தார் சமூகத்தின் பால் கொண்ட அடிமன அக்கறையைக் காட்டுவதால், அவர்தம் நோக்கு பாராட்டுக் குரியது.

– மலர்க்குழு



செயற்குழு உறுப்பினர்கள்



திரு தி. கனகசபை
செட்டியார்



திரு பழ.அடைக்கப்ப
செட்டியார்



திரு செ. முத்துப்பழநியப்ப
செட்டியார்



திரு மு. திருநாவுக்கரசு
செட்டியார்



திரு பழ. வயிரவன்
செட்டியார்



திரு ராம. பழநியப்பன்
செட்டியார்



திரு சுப. பழநியப்பன்
செட்டியார்



திரு ராம. சாத்தப்பன்
செட்டியார்

திருக்குட நன்னீராட்டு விழா

செயற்குழு உறுப்பினர்கள்



திரு செ. சிங்காரம்
செட்டியார்



திரு அண. செல்வம்
செட்டியார்



திரு வே.மருதப்பன்
செட்டியார்



திரு சிவ. ரெத்தினசபாபதி
செட்டியார்



திரு ந. பழனியப்பன்
செட்டியார்



திரு சி. காந்தி
செட்டியார்





திருக்குட நன்னீராட்டு விழா

மலர்க்குழு உறுப்பினர்கள்



முனைவர் திரு தமிழண்ணல்
(இராம. பெரியகருப்பன் செட்டியார்)



திரு தி.சிதம்பரம்
செட்டியார்



திரு பழ.அடைக்கப்ப
செட்டியார்



திரு மு.திருநாவுக்கரசு
செட்டியார்



திரு பழ.வயிரவன்
செட்டியார்



திரு ரெ.தியாகராஜன்
செட்டியார்



திரு சா.கதிரேசன்
செட்டியார்



திரு அரு.அழகுமாணிக்கம்
செட்டியார் (பாரதி)



திருக்குட நன்னீராட்டு விழா

நிதிக்குழு உறுப்பினர்கள்



திரு மு. பெரியணன் செட்டியார்



திரு தி. சிதம்பரம் செட்டியார்



திரு குமா. ராமநாதன் செட்டியார்



திரு மு. சுப்பையா செட்டியார்



திரு வி. முத்துக்கருப்பன் செட்டியார்



திரு லெ. முத்துக்கருப்பன் செட்டியார்



திரு பனை. அரு. ராமநாதன் செட்டியார்



திரு சுப. சுப்பிரமணியன் செட்டியார்



திரு அண. அருணாசலம் செட்டியார்

திருக்குட நன்னீராட்டு விழா

நிதிக்குழு உறுப்பினர்கள்



திரு முப. சொக்கலிங்கம் செட்டியார்



திரு பழ. சுப்பையா செட்டியார்



திரு அண. விஸ்வநாதன் செட்டியார்



திரு சொ. பெரியணன் செட்டியார்



திரு பெரி. சோலையப்பன் செட்டியார்



திரு ராம.வயிரவன் செட்டியார்



திரு சா. முத்துராமன் செட்டியார்



திரு ராம. வடுகநாதன் செட்டியார்



திருக்குட நன்னீராட்டு விழா

நிதிக்குழு உறுப்பினர்கள்



திரு மா. அருணாசலம் செட்டியார் (கெம்பு)



திரு க. ராமசெல்வம் செட்டியார்



திரு சு. ரெத்தினம் செட்டியார்



திரு சுப. ராஜேந்திரன் செட்டியார்



திரு மா. காசி செட்டியார்



திரு அண.வயிரவன் செட்டியார்





திருக்குட நன்னீராட்டு விழாவின்போது கட்டிடத்திற்காக

பெருநிதி தந்த நன்கொடையாளர் பெருமக்கள்



திரு தி. கனகசபை
செட்டியார்



திரு பழ.அடைக்கப்ப
செட்டியார்



திரு ராம. சொக்கலிங்கம்
செட்டியார்



திரு ராம. சபா ராமசாமி
செட்டியார்



திரு தி. சிதம்பரம்
செட்டியார்



திரு சித. தியாகராஜன்
செட்டியார்



திரு சு. நல்லகருப்பன்
செட்டியார்



திரு அண. விசுவநாதன்
செட்டியார்



திரு மு. பெரியணன்
செட்டியார்



திருக்குட நன்னீராட்டு விழாவின்போது கட்டிடத்திற்காக

பெருநிதி தந்த நன்கொடையாளர் பெருமக்கள்



திருமதி கல்யாணி
ராமநாதன்



திரு பழ.வயிரவன்
செட்டியார்



திரு Er. ச. முத்துப்பழநியப்பன்
செட்டியார்



திரு Er. அரு. தியாகராஜன்
செட்டியார்



திரு ந. முத்துக்கருப்பன்
செட்டியார்




திரு பழ. கருப்பையா
செட்டியார்



திரு நாம. வயிரவன்
செட்டியார்



திரு ரெ. தியாகராஜன்
செட்டியார்



திரு க. ராமசெல்வம்
செட்டியார்



திருக்குட நன்னீராட்டு விழாவின்போது கட்டிடத்திற்காக


பெருநிதி தந்த நன்கொடையாளர் பெருமக்கள்




திரு மு. சிவலிங்கம்
செட்டியார்



திரு சுப. ராமசாமி
செட்டியார்



திரு Dr. பெரி. வடுகநாதன்
செட்டியார்




திரு சிவ. ரெத்தினசபாபதி
செட்டியார்



திரு சி. முத்துராஜா
செட்டியார்




திருமதி க. ராஜாமணி
ஆச்சி



திரு TR. சபாபதி
செட்டியார்

திரு TR. வடுகநாதன்
செட்டியார்



திருக்குட நன்னீராட்டு விழா மலருக்கு

விளம்பரம் பெற்றுத்தந்த பெருமக்கள்



திரு தி. சிதம்பரம்
செட்டியார்



திரு பழ. வயிரவன்
செட்டியார்



திரு Er. ச. முத்துப்பழநியப்பன்
செட்டியார்



திரு ரெ. தியாகராஜன்
செட்டியார்



திரு பழ. அ. சுவாமிநாதன்
செட்டியார்



திரு க. தியாகராஜன்
செட்டியார்



திரு மு. சுப்பையா
செட்டியார்



திரு பழ. அ. லெட்சுமணன்
செட்டியார்



திரு மு. இளங்கோ
செட்டியார்



திருக்குட நன்னீராட்டு விழா மலருக்கு

விளம்பரம் பெற்றுத்தந்த பெருமக்கள்



திரு மு. பெரியணன்
செட்டியார்



திரு மு. திருநாவுக்கரசு
செட்டியார்



திரு வே. மருதப்பன்
செட்டியார்



திரு ம. ரவிசங்கர்
செட்டியார்



திரு பனை. கௌதமன்
செட்டியார்



திரு லெ. ராமநாதன்
செட்டியார்



திரு அண. விஸ்வநாதன்
செட்டியார்



திரு வி. முத்துக்கருப்பன்
செட்டியார்



திரு அண. செல்வம்
செட்டியார்



திருக்குட நன்னீராட்டு விழா மலருக்கு

விளம்பரம் பெற்றுத்தந்த பெருமக்கள்



திரு ராம. சாத்தப்பன் செட்டியார்



திரு சேதுராமன் சாத்தப்பன் செட்டியார்

திருக்குட நன்னீராட்டு விழா

விளம்பரக்குழு உறுப்பினர்கள்



திரு ராம. வயிரவன் செட்டியார்



திரு முப. சொக்கலிங்கம் செட்டியார்



திரு தி. அண்ணாமலை செட்டியார்



திரு லெ.ப. கரு. ராம. ராமநாதன் செட்டியார்



திரு பெரி. சோலையப்பன் செட்டியார்



திரு சி. பழநியப்பன் செட்டியார்



திருக்குட நன்னீராட்டு விழா


விளம்பரக் குழு உறுப்பினர்கள்



திரு மு. சிங்காரம் செட்டியார்



திரு முரு. பெரியகருப்பன் செட்டியார்



திரு பனை. ராமநாதன் செட்டியார்



திரு சி. முத்துராஜா செட்டியார்




திரு அண. அருணாசலம் செட்டியார்



திரு சிவ. ரெத்தினசபாபதி செட்டியார்







நமது கோவிலுக்கு அருள்மிகு **சோமாஸ்கந்தர்** உற்சவ மூர்த்தியை
செய்து நன்கொடையாகத் தந்த பெருமக்கள்



திரு சுப. சாத்தப்பன் செட்டியார்
இ.கிங்கிணிக்சுவர், நெற்குப்பை



வேகுப்பட்டி திருமதி **வள்ளியம்மை ஆச்சி**
நெற்குப்பை இ.கிங்கிணிக்சுவரில் பிறந்தவர்
திரு சுந்தரம் செட்டியார் மனைவி



உ
சிவமயம்
ஸ்ரீ முருகன் துணை
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

சிவபெருமான் துதி

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமைநன் னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே







முருகபெருமான் துதி

அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலெனவேல் தோன்றும்
நெஞ்சில் ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா வென் றோதுவார்முன்

பொன்னோங்கல் முன்னோங்கல் போலோங்கு
மணிமாடம் பொலிநெற்குப்பைப்
பொன்னோங்கு நகரோங்கப் புகழ்வணிகர்
குலமோங்கப் புரிபொற் கோயில்
பொன்னோங்கி லோர்முகமே புகல்ஆறு
முகமெனப்பல் புவனம் போற்றும்
பொன்னோங்கு மனையிரு புடையோங்கும்
குமரனடி போற்றி வாழ்வோம்.

நெற்குப்பை நகரத்தார்க்குச் சொந்தமான

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

எல்லா வளமும் நிறைந்து விளங்கும் தென்தமிழ்நாட்டின் பாடல்பெற்ற பாண்டிப்பதிகளான திருப்புத்தூர், பாரி ஆண்ட பறம்புமலைத் தலங்களுக்கும், வரலாற்றுப் புகழ்மிக்க பறியாமருந்துபட்டி திருத்தலத்திற்கும் அருகில் அமைந்து சிறந்து விளங்குவது நமது **நெற்குப்பைத்** திருநகர். இங்கு எழுந்தருளி நூற்றாண்டுக்கும் மேலாக அருள் வழங்கி வரும் அருள்மிகு வள்ளி தெய்வயானை உடனுறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கோபுரங்களுக்கு புதியவண்ணம் தீட்டியதுடன், அவசியமான பல திருப்பணிகள் செய்யப் பெற்றிருக்கின்றன. இந்த அழகிய திருக்கோவிலுக்கு நிகழும் மங்களகரமான **நந்தன ஆண்டு வைகாசித் திங்கள் 12 ஆம் நாள் (25-05-2012) வெள்ளிக்கிழமை,** சதுர்த்தி திதி புனர்பூச நட்சத்திரம், சித்த யோகம் வளர்பிறை கூடிய கடக லக்கின மங்கல நன்னாளில் ஐங்குற்றமும் இல்லா வெற்றிப் பொழுதில் (நிஷ்பஞ்சக ஜெய வேளையில்) **காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா** சிறப்பாக நடைபெற உள்ளது. அவ்வமயம் அன்பர்கள் அனைவரும் வந்து அருள்தரு முருகப்பெருமானை வணங்கி அவர்தம் திருவருள் பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.

ஆங்கிலத் தேதி	தமிழ்த் தேதி	கிழமை	நேரம்	நிகழ்ச்சி
23-05-2012	நந்தன ஆண்டு வைகாசி 10	புதன்	காலை 9 மணி முதல் மதியம் 12 வரை	பிள்ளையார் வழிபாடு, தூய்மைப் பூசை (புண்ணியாஹவாசனம்), இறை ஆணை பெறல், (அனுக்ஞை), பிள்ளையார் வேள்வி (ஹோமம்), நிலத்தேவர் வழிபாடு, (வாஸ்து பூஜை), 9 கோள்கள் வேள்வி (நவக்கிரக பூஜை)
			மாலை 5-30 மணி முதல் இரவு 9-00 வரை	புனித மண் பூசை, (மிருத் சங்க்ரஹணம்), முளைப்பாலிகை வழிபாடு (அங்குரார்ப்பணம்), காப்பு கட்டுதல், (ரக்ஷாபந்தனம்), கலச அலங்காரம் (கும்ப அலங்காரம்), நிறைகுடங்களில் அருள் சேர்த்தல் (கடஸ்தாபனம்), முதல் கால வேள்வி (ஹோமம்), திரவிய அவி (த்ரவ்யாஹுதி), நிறை அவி (பூர்ணாஹுதி), நான்மறை/திருமுறை ஓதுதல், சுடர் வழிபாடு (தீபாராதனை), பிரசாதம் வழங்கல்.
24-05-2012	நந்தன ஆண்டு வைகாசி 11	வியாழன்	காலை 9 மணி முதல் மதியம் 11-30 வரை	பிள்ளையார் வழிபாடு, தூய்மைப் பூசை (புண்ணியாஹவாசனம்), இரண்டாம் கால வேள்வி (ஹோமம்), திரவிய அவி (த்ரவ்யாஹுதி), நிறை அவி (பூர்ணாஹுதி), நான்மறை/திருமுறை ஓதுதல், சுடர் வழிபாடு (தீபாராதனை), பிரசாதம் வழங்கல்.
			மாலை 5-30 மணி முதல் இரவு 9-00 வரை	பிள்ளையார் வழிபாடு, தூய்மைப் பூசை (புண்ணியாஹவாசனம்), மூன்றாம் கால வேள்வி (ஹோமம்), திரவிய அவி (த்ரவ்யாஹுதி), நிறை அவி (பூர்ணாஹுதி), நான்மறை/திருமுறை ஓதுதல், சுடர் வழிபாடு (தீபாராதனை), பிரசாதம் வழங்கல். எண்கூட்டு மருந்து சாத்துதல் (அஷ்டபந்தனம்)
25-05-2012	நந்தன ஆண்டு வைகாசி 12	வெள்ளி	காலை 7 மணி முதல் காலை 8-30 வரை	பிள்ளையார் வழிபாடு, தூய்மைப் பூசை (புண்ணியாஹவாசனம்), நான்காம் கால வேள்வி (ஹோமம்),நாடிசந்தானம் ஸ்பர்சாஹுதி, திரவிய அவி, (த்ரவ்யாஹுதி), நிறை அவி (பூர்ணாஹுதி), சுடர் வழிபாடு (தீபாராதனை)
			காலை 9 மணி	திருக்குடங்கள் புறப்பாடு
			காலை 9-30 மணி	ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானங்களுக்கும் **திருக்குட நன்னீராட்டு** நான்மறை/திருமுறை ஓதுதல், பெருஞ்சுடர் வழிபாடு
			காலை 9-45 மணி	மூலவர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி விமான **திருக்குட நன்னீராட்டு** பெருஞ்சுடர் வழிபாடு, பிரசாதம் வழங்கல்.
			மதியம் 12 மணி முதல் 1 மணிக்குள்	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்கு பெருந்திரு நன்னீராட்டு பெருஞ்சுடர் வழிபாடு, பிரசாதம் வழங்கல்

வேள்வித் தலைமை : சர்வ சாதகம் சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி.சிவஸ்ரீ எஸ்.கே.ராஜா பட்டர். (2ம் ஸ்தானிகம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில், திருப்பரங்குன்றம், அர்ச்சகர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில், மதுரை :- முதல்வர் ஸ்ரீ சாஸ்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்) மற்றும் நெற்குப்பை ஸ்ரீ எஸ்.சக்திசுதன் குருக்கள்.

25-05-2012 இரவு
ஐம்பெரும் கடவுளர் திருவீதி உலா
நடைபெறும்

இங்ஙனம்
நெற்குப்பை நகரத்தார்,
நெற்குப்பை, சிவகங்கை மாவட்டம்.

14-03-2012



உ

சிவமயம்

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி துணை

சிவகங்கை மாவட்டம், நெற்குப்பை நகரத்தார்க்குச் சொந்தமான

நெற்குப்பை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா கலை நிகழ்ச்சிகள்

நிகழ்ச்சி நிரல்

23.05.2012 புதன்கிழமை

காலை — **"திருவாசகம் முற்றோதல்"**
நிகழ்த்துவோர் : மதுரை நகரத்தார் மகளிர் சங்கம், மதுரை.

24.05.2012 வியாழக்கிழமை

மாலை 5.00 மணிக்கு — **"ஆன்மீக அரங்கம்"**
பொதுத் தலைப்பு : "ஆறுபடை வீட்டின் அற்புதப் பெருமைகள்"

தலைமை : "தொல்காப்பியச் செம்மல்", "மண்ணின் மைந்தர்"
பேரா.முனைவர் திரு. தமிழண்ணல் அவர்கள்

- திருப்பரங்குன்றமும் திருச்செந்தூரும்
"பொற்கிழிக் கவிஞர்" சொ.சொ.மீ.சுந்தரம் அவர்கள்

- பழநி மலையும் சுவாமி மலையும்
"பட்டிமன்றப் பாவலர்" முனைவர் நா.கு.சுப்பிரமணியம் அவர்கள்

- திருத்தணியும் பழமுதிர்சோலையும்
"நாவுக்கரசி" விசாலாட்சி சுப்ரமணியம் அவர்கள்

இரவு 7.00 மணிக்கு — **"பக்திப் பேருரை"**
நிகழ்த்துபவர் : சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள்
தலைப்பு : "முருக தரிசனம்"

இரவு 9.30 மணிக்கு — **"இன்னிசை நிகழ்ச்சி"**
திருச்சி R.பத்மநாபன் குழுவினர் - ஸ்வரலயம் ஆர்க்கெஸ்ட்ரா
மற்றும் விஜய் டிவி ஏர்டெல் சூப்பர் சிங்கர்
முதல் வெற்றியாளர் நிகில் மேத்யூ
இணைந்து வழங்கும் மாபெரும் இன்னிசைத் தென்றல்

25.05.2012 வெள்ளிக்கிழமை

காலை 10.00 மணி — **"பாராட்டு விழா"**

வரவேற்புரை : தொழிலதிபர். உயர்திரு. தி.கனகசபை செட்டியார் அவர்கள்
தலைமை : தொல்காப்பியச் செம்மல் முனைவர். உயர்திரு தமிழண்ணல் அவர்கள்
முன்னிலை : சீர்வளர்சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள் கோவிலூர் திருமடம்
சிறப்பு விருந்தினர் : உயர்திரு. சொ. வள்ளியப்பா அவர்கள்
தலைவர், சோனா பொறியியல் கல்லூரிகள் குழுமம்
வள்ளியப்பா டெக்ஸ்டைல் மில் பெங்களூரு
கர்நாடக நூல் / துணி ஆலைகள் கூட்டமைப்பு, பெங்களூரு.
நன்றியுரை : தொழிலதிபர் உயர்திரு. பழ.அடைக்கப்ப செட்டியார் அவர்கள்

மதியம் 12.00 மணி — **"சிறப்புச் சொற்பொழிவு"**
நிகழ்த்துபவர் : நாவுக்கரசி திருமதி இளம்பிறை மணிமாறன் அவர்கள்

மாலை 5 மணிக்கு — **"பக்தி இன்னிசை"**
"இசையில் இணைந்த முருகன்" பக்தி மாமணி இன்னிசைவேந்தர்
சின்னத்திரைப் புகழ் சந்தி நாதன் குழுவினர், சென்னை.

மாலை 6.30 மணிக்கு — **"இன்னிசைப் பாட்டுப்பட்டி மன்றம்"**
நடுவர் : "தமிழ் மாமுகில்" குடந்தை நாக. துரையரசு M.A.
தலைப்பு : திரையிசைப் பாடல்களில் விஞ்சி நிற்பது

கற்பனை வளமே !	முத்தமிழ் மணமே !
காமெடி கிங் பேரா.கோ.பழநி	பலகுரல் பாடகர் பட்டுக்கோட்டை அன்பரசு
நகைச்சுவை முரசு இராஜநிதி	சொல்லரசி திருச்சி மனோன்மணி
தபேலா : பாஸ்கர்	கீபோர்டு : மரிய செல்வம்

இரவு 9.00 மணிக்கு — **"நகைச்சுவைத் திருவிழா"**
விஜய் டிவி கலக்கப்போவது யாரு? சன் டிவி அசத்தப் போவது யாரு புகழ்
"அசத்தல் மன்னன்", "காமெடி கிங்"
தேவகோட்டை A.R.இராமநாதன் B.A., B.L., தலைமையில்
கோவை ஜெகன், கோவை குமார், ரா.ரா.பிரபு, பொம்மை பாலா,
மேஜிக் குரு, சிநேக் பாபு, திருமதி பாபு, நாகேஷ் சங்கர்,
வடிவேல் பாலாஜி ஆகியோர் கலந்து கொள்ளும்
மாபெரும் நகைச்சுவை நிகழ்ச்சி

நிகழ்ச்சி தொகுப்பாளர் : தேவகோட்டை A.R.இராமநாதன் B.A., B.L.,

அனைவரும் வருக ! முருகன் அருள் பெறுக !!

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

ஆசியுரை



உ
சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
☎ : 04577 -264227

நெற்குப்பையில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு விழாக் காண இருப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி.

"அண்டினோர் துயர்தீர்க்கும் ஆறுமுகக் கடவுள்!
தொழுதகை துன்பம் தீர்க்கும் சுப்பிரமணியக் கடவுள்!
அபயம் என்று வந்தோர்க்கு ஆறுதல் தருவான்!
துன்பம் என்று வந்தோர்க்கு இன்பம் அளிப்பான் இறைநிதி அண்ணல்"

ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே!
ஈசருடன் ஞான மொழி பேசும் முகம் ஒன்றே!
கூறும் அடியார்கள் வினைதீர்க்கும் முகம் ஒன்றே!
குன்று உருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே!
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்!
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே!

- எத்தனை முகங்கள், எத்தனை பண்புகள், அத்தனையும் அவனின்றி ஓர் அணுவும் அசையாது. அன்பு, அறிவு, ஆற்றல், அருள் அனைத்தும் ஒருங்கே கொண்ட ஆறுமுகக்கடவுள் நெற்குப்பை நகரத்தார்களுக்கு ஒரு நாயகமாக இருந்து அருள்பாலிக்கும் அன்பு தெய்வம், கோயிலைத் தழுவிய குடிகளாய் வாழும் நகரத்தார்களுக்குக் காக்கும் குலதெய்வமாய் நெற்குப்பை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்,

உலகெங்கும் அறப்பணிகளை, அருட்பணிகளை ஆன்மீகப் பணிகளை சீரும் சிறப்புமாகச் செய்துவரும் நகரத்தார்களில் நம் நெற்குப்பை நகரத்தார்கள் ஆற்றிவரும் அளப்பரும் பணிகள் பாராட்டுக்குரியவை! தமிழும், சைவமும் இரு கண்கள் எனப் போற்றும் நெற்குப்பை நகரத்தார் தொண்டு தொடரட்டும், தளராது தமிழ்ப் பணியாற்றும் தமிழண்ணல். மலர்க்குழுத் தலைவராய் இருப்பது பொன்குடத்திற்கு பொட்டு இட்டது போன்றது. ஞானத்தேன் பொழியும் மலர்களாய் குடமுழுக்கு விழா மலர் மலரட்டும்,

நெற்குப்பை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் திருக்குட நன்னீராட்டு விழா சீரும் சிறப்புமாய் நிகழட்டும். அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அருள் அனைவருக்கும் கிட்டட்டும்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

பொன்னம்பல அடிகளார்

சீர்வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள்



உ
சிவமயம்

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - 630 307.
(வழி - மானகிரி)
சிவகங்கை மாவட்டம்

☎ 04565 - 236846

நாள் 24.11.2012.

கோவிலூர் ஆதீனம் சீர்வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகளின் ஆசியுரை

நந்தன வருடம் வைகாசி மாதம் 12ம் தேதி (25.05.2012) வெள்ளிக்கிழமை அன்று நெற்குப்பை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா நடந்தது அறிந்து மிக்க மகிழ்ச்சி. நெற்குப்பை நகரத்தார் பெருமக்கள் பல அறப்பணிகளும், சமுதாயப் பணிகளையும் திறம்பட செய்து வருகின்றார்கள்.

இந்நகர் பேராசிரியர்.தமிழண்ணல் அவர்களும் நம் மடாலயப் பணிகளில் சங்க இலக்கிய வெளியீட்டிற்கு தலைவராக இருந்து சிறப்பாக பணியாற்றினார்கள். மேலும் பல மடாலய தமிழ்ப்பணிகள் அனைத்திலும் பெரும் பங்கேற்று உதவினார்கள் அவர்கள் சீரிய தலைமையில் நடைபெறும் திருப்பணியும், குடமுழுக்கு விழாவும் சிறப்பாக நடந்தேற நம்முடைய வாழ்த்துக்கள் நெற்குப்பை. பழ. அடைக்கப்ப செட்டியார் அவர்களும் திரு திருநாவுக்கரசு செட்டியார் அவர்களும் நீண்ட காலம் நம் மடாலயத்தோடு தொடர்பு உடையவர்கள். நெற்குப்பை நகரத்தார்களும் கிராமத்து மக்கள் அனைவரும்
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் அருள் பெற்று பல பல
அரிய பணிகளை தொடர்ந்து ஆற்றிடவும் எல்லா நலமும் வளமும் பெற்றிடவும் குருமுதல்வர் கோவிலூர் ஆண்டவர் திருவடி சிந்தித்து வாழ்த்துகிறோம்.

வேணும்

ஸ்ரீ சற்குருநாதன் துணை

Justice M. Karpaga Vinayagam

வாழ்த்துரை

Justice M. Karpaga Vinayagam
Chairperson

सत्यमेव जयते

Appellate Tribunal For Electricity
CORE 4, 7TH FLOOR, SCOPE COMPLEX,
LODHI ROAD, NEW DELHI - 110 003
TEL.: 24368485 * FAX : 24368495
Mobile : 9990324999

RESI. : Bungalow No. 21, New Moti Bagh,
New Delhi - 110023
Tele. No. : 011-24673044

DATE : 10.5.2012

மதிப்பிற்குரிய ஸ்ரீசுப்ரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு விழாக்குழுவினர்க்கு,

வணக்கம்,

தாங்கள் அனுப்பிய அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றேன். மிகுந்த மகிழ்ச்சி. மிக்க நன்றி.

25-05-2012 அன்று திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவை முன்னிட்டு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

வாழ்த்துக்கள்!
நன்றி, வணக்கம்.


ம.கற்பக விநாயகம்.

(நீதியரசர் மு.கற்பக விநாயகம்)

ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு விழாக்குழு
இராஜா தெரு
நெற்குப்பை
சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு – 630 405.

V.N. CHIDAMBARAM





V.N. Chidambaram

No. 21, Kamala 2nd Street, Chinna Chokkikulam, Madurai-2. Ph : 95452-2531023

உ

சிவமயம்

பெறுநர் நாள் : 04.05.2012

திரு. தலைவர் அவர்கள்

திருக்குட நன்னீராட்டு விழா மலர் குழு

நெற்குப்பை - 630 405

நெற்குப்பை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பாக நடந்தேறியது. வள்ளி தெய்வயானை உடனாக சுப்பிரமணியரும் அமர்ந்து பக்தர்களுக்கு வரம் வழங்கிக் கொண்டிருக்கின்ற தருணத்தில், திருக்குட நன்னீராட்டு விழா மலர்க்குழுவின் சார்பில் வெளியிடப் பெறும் மலருக்கு அடியேனும் வாழ்த்துரை வழங்கப் பணித்தமைக்கு அறிஞர் தமிழண்ணல் உள்ளிட்ட குழுவினருக்கு என் இதய வாழ்த்துக்களும் வணக்கமும் நிறைக.

பாரி மன்னன் ஆண்ட பிறம்பு மலைத் தேசம் நெற்குப்பை. நெல் என்றால் நெல் மணிகள். குப்பை என்றால் "மாணிக்கக் குவியல்" என்பதாகப் பொருள். மாணிக்கக் குவியலாக நெல் குவிய போரடித்து குவிந்த பெருமைக்குரிய ஊர் நெற்குப்பை என்பது ஊரார் அறிந்த உண்மை. பழநியம்பதிக்கு 400 ஆண்டுகளுக்கு முன்பாகவே பக்தி நடைப்பயணம் சென்ற பெருமை நெற்குப்பை நகரத்தாரையே சாரும். நெற்குப்பை குப்பாபிச்சாஞ் செட்டியாரின் புதல்வன் குமரப்பன் செட்டியார்தான் முன்னோடி: எங்கள் நேமம் கோவில் பங்காளி குமரப்ப செட்டியார் உப்பு வணிகம் செய்து வந்தவர். அந்த வணிகத்தின் லாபத்தில் 16 அணாவில் அரையணா வீதம் முருகனுக்கு என

வாழ்த்துரை

கடவுளுக்கே பங்கு கொடுத்த பெருமகனார். அப்படிச் சேர்ந்த பணத்தில் பழனி நடைப்பயணத்திற்கும், முருகனுக்கும் பயன்படுத்திய பெருமைக் குரிய நகரத்தார். ஆயக்குடி ஜமின்தாரின் துணைவியார் வயிற்று வலியால் துடித்தபோது கனவில் பழநி முருகப் பெருமான் தோன்றி இடும்பன் மலையில் நின்று காவடியுடன் பக்தி நடனமாடிக் கொண்டிருக்கின்ற குட்டையன் செட்டியாரிடம் சென்று திருநீறு பெற்று வந்து வயிற்றில் தடவ வயிற்றுவலி தீரும் என்றதும், இது உண்மையில் நிகழ்ந்ததும் நிஜ சரித்திரம். அதனாலேதான் நெற்குப்பை குட்டையன் செட்டியார் சாமியாடி செட்டியார் பரம்பரையினருக்கு இன்றும் பழநியில் முதல் மரியாதையும் சிறப்பும் செய்யப்பட்டு வருகிறது. இது நெற்குப்பைக்கு கிடைத்த மணி மகுடம். செட்டி மகன் கப்பலுக்கு செந்தூரான் துணை என நெஞ்சம் நிறைக்க முருகனை நினைத்துக்கொண்டு பாய்மரக் கப்பலில் கொண்டுவிக்கச் சென்ற நகரத்தார் மரபினரின் செல்லக் கடவுள் முருகனல்லவா!

நம்மவர்கள் ஒரு கடிதம் எழுதும் போதும் அன்றைய தினத்தின் வரவு செலவுகளை எழுதும் போதும் பிள்ளையார் சுழியிட்டும் சிவமயம் எழுதியுமே துவங்குவார்கள். சிவனின் மூத்த பிள்ளையான பிள்ளையாரை எழுதியவர்கள் இன்னொரு மகனான முருகனுக்கு தாங்கள் வாணிபத்திற்குச் சென்ற மலேயா, சிங்கப்பூர், இலங்கை போன்ற பல நாடுகளிலும் கோயிலை நிறுவி வணங்கி வழிபட்டு வந்தனர்.

நகரத்தாரின் செல்லக் கடவுளான சுப்பிரமணியருக்கு நெற்குப்பையில் ஒரு ஆலயத்தை நிறுவி பன்னிரெண்டாண்டுக்கு ஒருமுறை திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவை தொடர்ந்து நடத்தி வரும் நெற்குப்பை நகரத்தாரை வணங்குகிறேன்.

நெற்குப்பை சுப்பிரமணியரை வணங்குவோருக்கு
பொற்குப்பை குவியட்டும்
என வாழ்த்துகிறேன். நன்றி.

அன்புள்ள

வி. என். சிதம்பரம்.

(வி. என். சிதம்பரம்)



தமிழ் மந்திரம்

- தமிழண்ணல்



மந்திர தந்திரம் என்பது ஒரு சொல் வழக்கு. மந்திரத்தால் மாங்காய் விழுமா? 'மந்திரம் கால் மதி முக்கால்', எனப் பல பழமொழிகள் உள. பூசகர் மந்திரம் சொல்லிச் சடங்குகள், அருச்சனைகள் செய்கிறார். தேள் கடிக்கு மந்திரிப்பது உண்டு. இம் மந்திரம் எனும் சொல் பல்வேறு பொருள் வளர்ச்சி பெற்றுள்ளது. மந்திரத்தால் ஒருவர் வாழவும் சாகவும் செய்ய முடியும் என்பது இடைக்கால நம்பிக்கை. வடமொழியில் கூறப்படுவனவே மந்திரங்கள் என்றும் மந்திரிப்பவர்கள் மறைவாக முணுமுணுக்கும் வார்த்தைகளே மந்திரங்கள் என்றும் நம்புவோர் பலர்.

இம் மந்திரம் என்ற சொல் மிகவும் பழைய சொல். தமிழிலும் மூலத் திராவிட மொழியிலும் இச்சொல் வழங்கியுள்ளது. மனத்தில் திரும்பத் திரும்ப நினைப்பது; திரும்பத் திரும்ப வாயால் சொல்வது உருவேற்றுதலாகும். இதனை நெட்டுருப் போடுதல் என்று பள்ளிப் பிள்ளைகள் கூறுவர். மந்திரம் செபிக்கப்படும் அல்லது செபிப்பது மந்திரமாகும். இது எல்லா மொழிகளுக்கும் பொது. தொல்காப்பியர் ஏழு வகை யாப்புப் பற்றிக் குறிக்கும் போது "வாய்மொழி மந்திரம்" எனும் சொற்களை ஒரே பொருளில் ஆள்கிறார். வாய்மொழி - வாய்மை மொழி - உண்மை.

இது பெரியோர் வாய்மொழியாகும். கற்றறிந்த ஆன்றவிந்தடங்கிய சான்றோர் கூறுவன பொருள் நிறைந்த சொற்களாக இருக்கும். பொருள் நிறைந்த சான்றோர்தம் வாக்குப் பயனை விளைவிக்கும். அது வெற்றுப் பேச்சு அன்று.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப (1434)

மறைமொழி கிளந்த மந்திரம் (1421)

என்பன தொல்காப்பியம். மறைமொழி - கருத்து நுட்பமானது. எளிதில் பொருள் அறிய முடியாதது. நுண்ணறிவுடையார் தேடிக்கண்டு கொள்ள வேண்டியது.

இன்று நாம் மந்திரம் எனச் சொல்வதையே தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். இளம்பூரணர் யான் அறியேன் என்பார் போல, வல்லார்வாய்க் கேட்டுணர்க எனக் கூறிவிட்டார். பேராசிரியர் "சொல்லிய சொல்லின் பொருள் பயனை விளைவிக்குமாறு சொல்லவல்ல ஆற்றலுடையார் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடர்களே மந்திரம்"

என விளக்கியுள்ளார். மேலும் இவை தமிழ்மந்திரம் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

திருவள்ளுவர் 'நீத்தார் பெருமை' யில்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (28)

என்று இதைப் பின்பற்றி அவ்வாறே கூறியுள்ளார்.

நிறைமொழி மாந்தர் என்பதால் அத்தகைய தகுதியுடையார் யார் கூறினும் அவை மந்திரமாகும். நிறைமொழி பொருள் நிறைந்தது; பயன் நிறைந்தது. 'ஆணையிற்கிளந்த' என்பது 'அவர்கள் தம் தகுதிப் பாட்டினால் கூறிய, அல்லது ஆணையிட்டுக் கூறிய' என்பதாம். தமிழில் 'மறை மொழி' என்பது பொருள் பொதிந்து, உள்ளே மறைந்திருந்து, தேடத்தேடப் புதுப் புதுப் பொருள் தருவது. திருஞானசம்பந்தர் தமது பாடல்களை ஓதுவார் பெறும் பயனை 'அரசாள்வர் ஆணை நமதே' என்பார். தமிழில் 'திருமந்திரம்' எனத் திருமூலர் அருளியவை தமிழ் மந்திரங்களல்லவா? வைணவர் திராவிட வேதம் எனப் போற்றும் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில், 'திருவாய் மொழி' என்பது நம்மாழ்வார் பாடிய தனிப் பிரபந்தம் மற்றும் திருமொழி, பெரிய திருமொழி என்பனவும் உள. இவை யாவும், அதாவது பன்னிரு திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்கள் யாவும் தமிழ் மந்திரங்களே என்பதற்கு இப்பெயர்களே சான்றாகின்றன. திருவள்ளுவர் 'நிலத்து மறைமொழி' என்றதும் இவை தமிழர்கள் நிலவுலகில் படைத்து வழங்கிய தமிழ் மந்திரங்கள் என வேறுபிரித்துக் காட்டுகின்றது.

செடிகொடி மரங்களின் வளர்ச்சி கண்ணுக்குத் தெரிவதில்லை. அவை வளர்வதை – வளர்கிறபோதே பார்க்க முடிவதில்லை. சில நாள் கழித்துப் பார்த்தால் வளர்ச்சி தெரியும். மந்திரங்கள் பயனை விளைவிக்கும் என்பதும் அது போன்றதேயாம்.

முனிவர்கள் சபித்ததும் நரியாவது, தேவராவது போல்பவை சமய நம்பிக்கைகள் மட்டுமே. அவற்றை உயர்வு நவிற்சி எனலாம்.

நாம் தமிழ் மந்திரங்களை ஓதி நல்வாழ்வு பெறுவோமாக.

நெற்குப்பை (செட்டி நாடு) குமரவேள் துதி

சொற் கொப்ப நெஞ்சிற் செயலிற்
சிவபணி சூழ்வணிகர்
நெற்குப்பை யம்பதி வேளை
மயிலை நிலவயிலைப்
பொற்குப்பை பன்மணிக் குப்பை
பூக்குப்பை புனையும் எழில்
கற்கொப்பு பூண்ட என்
கள்ள மனத்தைக் கரைத்ததுவே

இப்பாடல் யார் எழுதியது எனத் தெரியவில்லை.

இதை நமக்கு அனுப்பியவர் கவியரசு முடியரசனின் தாய்மாமன் மகன் புலவர் து. சுப்பராயலு (தென்கரை பெரியகுளம்) ஆவார். அவருக்கு நன்றி.

செய்தி : தமிழண்ணல்

(குப்பை – குவியல்; சொற்கு ஒப்ப – சொற்படி; வேளை – முருகனை;
நிலவு அயில் – ஒளிரும் வேல்; கற்கு ஒப்பு – கல்போன்ற)




திருவாசக முற்றோதல்



யாகசாலைத் துவக்கம்

மருந்து இடித்தல்




















யாகசாலை நிகழ்வுகள்













புனிதக்கடங்கள் புறப்பாடு



யாகசாலை நிகழ்வுகள்










நெற்குப்பை
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
திருக்குடங்கள்மீது நன்னீர் பெய்தல்
நாள் : 25.05.2012





விருந்தினரை வரவேற்கும் வியன்மிகு வளைவு



சீர்மிகு சிங்கப்பூர் நகரத்தார் சிறப்பு



– நெற்குப்பை மு. திருநாவுக்கரசு

இறை காப்பு

1. அன்னை கயற்கண்ணி அருள் அண்ணல் சொக்கேசர்
முன்னைப் பழம் பெற்று முக்திதரும் ஐயங்கரனார்
பின்னைக் குன்றேறிப் பிறப்பறுக்கும் வடிவேலன்
முன்னே பணிவோம் மகிழ்ந்து.

வாழ்த்து

2. நாகூரார் சன்னிதியை நாற்புறமும் சுற்றிவந்து
போகும் ஊர்சொல்லிப் புண்ணியரைத் துணைவேண்டி
நாகைத்துறைப்பட்டிணத்தில் நாவாய் தனிலேறி
ஏகிச் சிறந்தார் அயல்.

3. நாடும் தேட்டைக்காய் நற்சுற்றம் புறத்திட்டு
ஆடும் மரக்கலத்தில் அந்நாளில் கடல் கடந்து
கூடும் நாடெல்லாம் குமரனுக்கு கோவில் கட்டி
பாடிப் பரந்தார் நிதம்.

4. சிங்கை நகரத்தார் சீர்மிகு நற்கோவிலதில்
தங்கக் குமரன்தன் தண்டமுடன் காட்சிதர
அங்கம் புரண்டு அழகன்தாள் சரணடைந்தார்
பொங்குக முருகன் புகழ்.

5. செட்டி முருகன்தன் திருவருளால் நகரத்தார்
எட்டிக் கடல் கடந்து எழிலார்ந்த சிங்கையிலே
வட்டிக்கடை முதலாய் வணிகம் கணினி வரை
தொட்டார் சிகரம் தொடர்.

6. அழகுவடிவேலனவன் ஆலயத்தை நிர்வகித்து
வழுவிலாத் தொண்டாற்றும் வள்ளல் வயிரவனார் (1)
தொழுத இருகையும் தும்பைப்பூ மலர்முகமும்
எழுதக் குறையா இதம்.

7. நாடு விட்டுப் பெயர்ந்து நற்சிங்கை மண் மீதில்
கூடிக் குடும்பங்கள் குலச்சிறப்பை நிலை நாட்ட
நாடித் தோற்றுவித்தார் நகரத்தார் சங்க மதை
கேடில் விழுமம் நிறை.

8. சங்கத்தை உயிரூட்டி தனிமரத்தைத் தோப்பாக்கி
இங்கிதமாய்ச் செயலாற்றும் ஏற்ற மிகு தலைவரவர்
தங்கத் திருமகனார் தகு **இராமசாமி**யவர் (2)
எஞ்ஞான்றும் வாழ்க இனிது.

9. அலை தவழும் சிங்கைக்கு அணிசேர்க்கும் நகரத்தார்
கலைகளிலே பண்பாட்டில் கவின்தமிழ்ப் பேச்சினிலும்
தொலை நோக்கில் இளையர்தமை துறைதோரும் கூராக்கி
நிலைத்த பணி செய்தார் நீடு.

10. ஆர்ப்பரிக்கும் சிங்கை அழகுமலர் ஆசிரியர்
நேர்கொண்ட பார்வை நேரியர் **அருணாசல**ரவர் (3)
கூர்த்த மதி நுட்பம் குளிர் தென்றல் அணுகுமுறை
சேர்த்தார் மலர்க்குப் புகழ்.

11. ஆர்ப்பரித்து எழுச்சிமிக அறிஞர் குழாம் சூழ
ஆற்றல் மிகு மறவர் அணிசேர் **அருணாசல**த்தார் (3)
போர்ப் பரணி பாடி புறப்பட்டார் தமிழ் காக்க
ஏற்றமுடன் வாழ்க இனிது.

12. தத்தைத் தமிழ் மொழியின் தகைமிகுந்த சான்றோர்
புத்தாக்கச் சிந்தனையர் புயலனை **அருணாசல**ரை (3)
'முத்தமிழ்க் காவல'ராய் முடிசூட்டி வாழ்த்திட்டார்
எத்திக்கும் பரவுக புகழ்.

வாழ்த்தும் நெஞ்சம்

இருப்பு : சிங்கப்பூர் — நெற்குப்பை **மூ.திருநாவுக்கரசு**
20.12.2006

(மு.திருநாவுக்கரசு சிங்கப்பூர் சென்றிருந்த போது சிங்கப்பூர் நகரத்தாரைப் போற்றி எழுதி அளித்த கவிதை மாலை)

<u>வாழ்த்துப் பெறுவோர் :</u>

1. உயர்திரு. **S.வயிரவன் செட்டியார்** (நாச்சியாபுரம்) அவர்கள், தக்கார், தண்டாயுதபாணி கோவில், சிங்கப்பூர்.
2. உயர்திரு. **அரு.ராமசாமி செட்டியார்** அவர்கள், தலைவர், நகரத்தார் சங்கம், சிங்கப்பூர்.
3. உயர்திரு. **சுப. அருணாசலம் செட்டியார்** அவர்கள் (நற்சாந்துபட்டி), ஆசிரியர், சிங்கப்பூர் நகரத்தார் மலர், சிங்கப்பூர்.



நெற்குப்பை - சிறுகுறிப்பு



அரு. மாணிக்கம் செட்டியார்

விவரம் தந்தவர் : அரு. மாணிக்கம் செட்டியார்

எழுதியவர் : மு. திருநாவுக்கரசு

நெற்குப்பைச் சிவன் கோவிலில் உள்ள கல்வெட்டுக்கள் தரும் செய்திகள் பலபட உள்ளன. அதில் குறிப்பிடத் தகுந்தவை நெற்குப்பை எந்தெந்த மன்னர் பரம்பரையினரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதே.

நெற்குப்பை என்ற பெயர் எல்லாக் கல்வெட்டுக்களிலும் காணப்படுவதிலிருந்து ஊரின் பெயர் துவக்கம் முதல் அதுவே என்பது உறுதிப்படுகிறது. மணிமுத்தாற்றின் கரையில் அமைந்தது என்பது மற்றொரு செய்தி. வளமிக்க வயல்களைக் கொண்ட ஊராக இருந்து ஒரு காலத்தில் அறுவடையின் போது மிகுதியும் நெல் விளைந்து குவிந்தது என்பதால் 'நெற்குப்பை' எனப் பேராயிற்று என்று கல்வெட்டு அறுதியிட்டுச் சொல்கிறது. நெற்களஞ்சியங்களும் அதிக அளவில் இருந்தன என்று கருதப்படுகிறது.

கல்வெட்டுக்கள் 'நெற்குப்பை'யை 'புறமலை நாடு' என்ற நாட்டுப்பிரிவில் அடங்கும் எனக் குறிப்பிடுகின்றன. சான்றாக ''இரண்டாம் இராசராச சோழனின் நெற்குப்பைக் கல்வெட்டு'' பாண்டிநாட்டுப் புறமலைநாடு என்று இதனைக் குறிப்பிடுகிறது.

'நெற்குப்பை', பொன்னமராவதிக்கு அருகில் இருப்பதால் ''வாணாதி ராயர் கல்வெட்டு'' ''புறமலை நாட்டுப் பொன்னமராவதி நெற்குப்பை'' என்று வகைப்படுத்துகிறது.

ஒரு வேளை 'புறமலை' என்ற அடைமொழி நமக்கு அருகில் இருக்கும் 'பிரான்மலை' என்ற குன்றுக்கு புறத்தே உள்ள ஊர்களைக் குறிக்கின்றன எனக் கொள்ளலாம்.

சிந்தனை மொழிகள்



– பழ.வயிரவன்,

மகிழ்ச்சி

ஏழு ஸ்வரங்களை முறையாக
வரிசைப் படுத்தினால்
இனிய இசை கிடைக்கும்
அது போல பேசும் முன் கேள்!
எழுதும் முன் படி!
செலவழிக்கும் முன் சம்பாதி!
முதலீடு செய்யும் முன் விசாரி!
குற்றம் செய்யும் முன் நிதானி!
ஓய்வு பெறும் முன் சேமி!
இறக்கும் முன் தருமம் செய்!

என்ற ஏழு நியதிகளின் அடிப்படையில் நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் இனிதாய் அமையும் அல்லவா ?

நாகாக்க காவாக்கால்

கோபமாய்ப் பேசினால்
குணத்தை இழப்பாய்
அதிகமாய்ப் பேசினால்
அமைதியை இழப்பாய்
வெட்டியாய்ப் பேசினால்
வேலையை இழப்பாய்
வேகமாய்ப் பேசினால்
அர்த்தத்தை இழப்பாய்
ஆணவமாகப் பேசினால்
அன்பை இழப்பாய்
பொய்யாய்ப் பேசினால்
பெயரை இழப்பாய்
சிந்தித்துப் பேசினால்
சிறப்பாய் இருப்பாய்

மாதா பிதா குரு தெய்வம்

தாயின் அருமை தெரியும்
குழந்தையின் பிறப்பில்;
தந்தையின் அருமை தெரியும்
பிள்ளையின் வளர்ச்சியில்;
ஆசிரியரின் அருமை தெரியும்
மாணவனின் படிப்பில்;
இறைவனின் அருமை தெரியும்
இயற்கையின் படைப்பில்.

அனுபவம்

அறுபது சொல்வது
அனுபவ நிஜம்;
அதை இருபது கேட்டால்
ஜெயிப்பது நிஜம்

வெற்றி

விழித்து எழுந்தவுடன்
கிடைப்பதல்ல வெற்றி
விழுந்து எழுந்தபின்
கிடைப்பதே வெற்றி

நெற்குப்பை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்

தல வரலாறு



– தகவல் சுப.சுப்பிரமணியன், நெற்குப்பை

நெற்குப்பையில் உள்ள நகர மடத்திற்கு மேல்புறமுள்ள பெரிய பள்ளிக் கூடத்திற்கும் (முன்பு படிப்பகம்) மேல் புறமுள்ள திருக்கோவிலுக்குச் சொந்தமான சகடைக் கொட்டகை உள்ள இடத்தில் கூரைக் கொட்டகையில் சுப்பிரமணியர் - வள்ளி - தெய்வானை நல்லாசியுடன் அமைந்த செம்பு விக்கிரகத்தையும் செம்பு வேலையும் பிள்ளையார் திருஉருவச்சிலையையும் வைத்து நெற்குப்பை நகரத்தார்கள் வழிபட்டு வந்துள்ளார்கள். அங்கு பண்டாரத்தைக் கொண்டு தினப்படி பூசையும் செய்து வந்திருக்கிறார்கள்.

முதல் திருக்குட நன்னீராட்டு செய்வதற்கு சில ஆண்டுகள் முன்பு நெற்குப்பையில் அனைத்துப் பிரிவையும் சேர்ந்த நகரத்தார் பெருமக்கள் கூடி திருக்கோவில் கட்டுவதற்கு முடிவு செய்து அதற்கான இடமும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

இப்பொழுதுள்ள திருக்கோவிலின் கருவறையும் அர்த்த மண்டபமும் உள்ள இடம் நெற்குப்பை நேமங் கோவிலைச் சேர்ந்த கு.பழ. சு.பழ.சுப்பிரமணியன் செட்டியாருக்குச் சொந்தமான இடமாக இருந்தது. நகரத்தார் பெருமக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அந்த இடத்தில் உள்ள கொட்டகையையும் இடத்தையும் திருக்கோவில் கட்ட தானமாகக் கொடுக்கச் சம்மதித்துள்ளார்கள். அந்த இடத்தில் 5.2.1901 ல் திருக்கோவில் கட்ட கல் திருப்பணி செய்ய சுப முகூர்த்த நாளில் ஆரம்பித்துள்ளார்கள்.

9.7.1905 இல் இப்பொழுதுள்ள திருக்கோவில் கருவறையும், (மூல ஸ்தானமும்), அர்த்த மண்டபமும் கட்டி அதன் மேல் கோபுரமும் கட்டப்பட்டு கூறைக் கொட்டகையில் இருந்த விக்கிரகங்களையும் பிள்ளையாரையும் வைத்து அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கல் சிலையும் வள்ளி தெய்வானை சிலையும் சுவாமிமலையில் செய்து நிர்மாணித்து நன்னீராட்டு விழாவும் நடந்தேறியது.

கவியரசர் இரவீந்திரநாத தாகூரும் காரைக்குடி வி. ஆர். எம். செட்டியாரும்



– தமிழண்ணல்

காரைக்குடியில் வி.ஆர்.எம். செட்டியார் என்ற ஒரு பேரறிஞர் வாழ்ந்தார். அவரை அங்கு இன்று யாருக்கேனும் நினைவிருக்கிறதோ என்னவோ?

தமிழ் இலக்கியப் புலமையுடன் சிறந்த ஆங்கிலமொழி வல்லுநருமாவார். தலைசிறந்த ரசிகர்; ஒரு பாடலைப் பற்றியே பல மணி நேரம் சுவைத்துச் சுவைத்துப் பேசுவார். கவியரசு **முடியரசன், கவிஞர் பழனியப்பன்** யான் என மூவரும் எங்கேனும் சந்தித்து விட்டால் போதும் மணிக்கணக்கில் அவர் பேச்சைக் கேட்டு இன்புறுவோம்.

இரவிந்திர நாதரின் **'கீதாஞ்சலி'**யை முதன் முதலாய்த் தமிழில் மொழிபெயர்த்தவர் அவர். அவரைத் தாகூருடைய பக்தர் என்றே கூறலாம்.

தாகூரின் 150 ஆம் பிறந்தநாள் விழாவில் அவருடைய குறிப்புக்கள், சிலவும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அவர் சைகோனில் கொண்டுவிற்கப் போய்த் திரும்பவந்து காரைக்குடியிலேயே வேறு தொழிலின்றி வறுமையில் உழன்றவர்.

வி.ஆர்.எம்.பற்றிய சில குறிப்புகள் மட்டும் (THE HINDU) "இந்து" நாளிதழில் மே இரண்டாம் நாள் வெளிவந்துள்ளன. அக்கட்டுரை தமிழ்த்தாத்தா உ.வே. சாமினாதய்யரைத் தாகூர் அவர்கள் வந்து சந்தித்தது பற்றியது. அதில் தாகூர் நூல்களின் மொழி பெயர்ப்பாளர்கள் த.நா.குமாரசாமி, அவர் தம்பி சேனாபதி, ஆங்கிலப் பேராசான் அ.சீனிவாசராகவன் பற்றிய குறிப்புக்களுடன் செட்டியார் பற்றியும் சில செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. (செட்டியார் படம் மட்டும் இல்லை. கிடைத்திலது போலும்)

தாகூரின் பக்தரான செட்டியார் அவரது நூல்களை மொழிபெயர்ப்பதையும் பரப்பு வதையும் தம் வறுமையிலும் தம் வாழ்நாள் முழுவதும் கடமையாகக் கைக் கொண்டிருந்தவர்.

திருச்சி புனித வளனார் கல்லூரியில் 1914ல் தாகூர் 'காடுகள் தரும் செய்தி' (The Message of the forest) என்பது பற்றிச் சொற்பொழிவாற்றியுள்ளார்.

மிக்க இளமைப் பருவத்தில் இப் பொழிவைக் கேட்ட செட்டியார், அதில் பல விளங்க வில்லையாயினும், அவர்பால் முழுமையாக ஈடுபட்டுவிட்டார். 1948இல் வெளியான "தாய்நாடு" இதழில் இதைச் செட்டியாரே குறிப்பிட்டுள்ளார்.

சுருங்கச் சொன்னால் அவர் தாகூர்தாசன் ஆகிவிட்டார்.

செட்டியார் மீண்டும் தாகூரைச் சந்தித்தது 1929ல் சைகோனில் ஆகும். அங்கு தாகூரின் சொற்பொழிவுகளைச் செட்டியாரே மொழி பெயர்த்துள்ளார். இதனால் செட்டியார் தாகூரின் அன்பிற்குப் பாத்திரமான நண்பரானார். அவரும் அவர் நண்பரும் அவர்கள் நடத்திய முருகானந்த வாசகசாலைக்குப் பேசுமாறு அழைத்தனர். அந்நூலகத்தின் முதலாம் ஆண்டு விழாவில் பேசிய தாகூரின் பேச்சு **கவிதா மண்டலம்** என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தாகூருடன் நடத்திய ஒரு நேர்காணலில் தாகூர் தாம் விசுவபாரதிக்கு நன்கொடை சேர்க்க உலகப் பயணம் மேற்கொண்டதைக் குறிப்பிட்டு இந்தியர்கள் சற்றும் உணர்வின்றி "இதற்காகப் பிச்சையெடுக்கும் நிலைக்கு வந்திருக்க வேண்டாம்" என்று கூறினர் என்பதைச் சொல்லி வருத்தப்பட்டுள்ளார்.

பின்னர் தாகூரைச் சைகோனிலுள்ள தண்டாயுதபாணி கோவிலுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு அவருக்கு நகரத்தார் களால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு முருகனுக்கு அமெரிக்க டாலர் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட விலை மதிப்புடைய வைர நகைகள் அணிவிக்கப் பெற்றிருந்தனவாம்.

தாகூர் செட்டியாரிடம் "Adorning God With Flowers Was the best way and the diamond jewels should be used for providing education" என்றாராம். இறைவனுக்கு மலர் மாலைகள் சூட்டுவதே மிக நல்லது; வைர நகைகளைக் கல்விக்குப் பயன்படுத்தலாம் என்ற தாகூர் கூற்று நகரத்தார்களுக்கே சொன்ன அறிவுரை போலுளது. செட்டியாரின் நண்பர் இராம. இராமனாதன், தாகூரின் நூல்களை அச்சிட , ஒரு பதிப்பகமே செட்டியாரால் தொடங்கப்பட்டதையும் ஆனால் இலக்கிய நூல்களை விற்க முடியாமல், அந்நூற்படிகளை ஒரு பழைய பேப்பர் வணிகனிடம் விற்க நேர்ந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சைகோனிலிருந்து வந்த பிறகு வேறு தொழிலில் ஈடுபடாமல் தாகூரின் நூல்களைத் தமிழாக்கம் செய்வதையே தொண்டாகச்செய்து, இறுதியில் வறுமையில் வாடிய வி.ஆர்.எம். செட்டியார் பற்றி மேலும் பல செய்திகள் இன்று கிடைக்கக்கூடும். அவற்றை எல்லாம் தேடித் தொகுத்து வெளியிடுவது நகரத்தார்களுக்குப் பெருமை தரும்.



கவிதைத் துணுக்குகள்



– மு.பெரியணான்

தவம்

பிரபஞ்சத்தின் தவம் உலகமானது
உலகின் தவம் மனிதரானது
மனிதனின் தவம் என்னவாகும்
மகாத்மா ஆக வேண்டும்

மனிதம்

தாயின் கருவில் மனிதம்
தவழ்ந்த போதும் மனிதம்
வளர்ந்த பின் மறந்திடலாமா?
வளரும் முதியோர் இல்லங்கள் மனித
வாரிசுகளின் மானுட முடக்கம்.

நிம்மதி

தாயின் மடியில் குழந்தைக்கு நிம்மதி
தடுமாராத நீதியின் மடியில் மக்களுக்கு நிம்மதி
மானுடம் மாய்ந்து போகாத போது
மனிதர்களுக்கு நிம்மதி.

ஊழியர் குடியிருப்பு திறப்பு விழா













திருவுருவச் சிலைகள்























கவினுறு நன்னீராட்டைக் கண்ணுறும் மெய்யன்பர்கள்









அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்குட

நன்னீராட்டு விழா மலர் 2012







கண்துஞ்சா கடமையாளர்கள்



தவசீலருடன் மேடையில் தக்கார்



சுவாமிகள் பொற்கரத்தால் பொன்னாடை

















பாராட்டு பெறும் பண்பாளர்கள்


















பாராட்டு பெறும் பண்பாளர்கள்





















பாராட்டு பெறும் பண்பாளர்கள்



















பாராட்டு பெறும் பண்பாளர்கள்









சுவாமிகள் கலந்துரையாடல்



உற்சவ மூர்த்திகள் அலங்காரத்தில்













ஏல நிகழ்ச்சிகள்









செவிக்கு உணவு ஈந்த செம்மல்கள்

சுகி சிவம்



இளம்பிறை மணிமாறன்




பக்திப் பேருரை


ஆன்மீக அரங்கம்



இன்னிசை நிகழ்ச்சி


இன்னிசைப் பாட்டுப் பட்டிமன்றம்


பக்தி இன்னிசை


நகைச்சுவைத் திருவிழா


ஆன்மீகச் சொற்பொழிவு



கலை நிகழ்ச்சிகள்



பொன் மொழித் தோரணம்





வ. அன்னமயில்

துன்பம் வருவது ஏன்?

அமைதியான கடல்
திறமையான மாலுமிகளை
உருவாக்குவதில்லை – அதே போல்
சோதனைகளையும்
துன்பங்களையும்
இறைவன் நமக்குக் கொடுப்பது
மனதைத் திடப்படுத்தி
பக்குவப்படுத்தி
திறமைகளை முழுமையாக
வெளியில் கொண்டு வந்து
நாம் வாழ்க்கையில்
உயர்வதற்குத் தான்.

எதிர்பார்ப்பு

கடமையைச் செய்யுங்கள்
பலனை எதிர்பாருங்கள்
மனிதர்களிடத்தில் அல்ல
இறைவனிடத்தில்

முயற்சியின்மை

முயலும் வெற்றிபெறும்
ஆமையும் வெற்றிவெறும்
முயலாமை ஒன்று தான்
வெற்றி வெறாதது

உயர்வானவை

பிரார்த்தனை செய்யும்
உதடுகளை விட
பிறருக்கு உதவிடும்
கரங்கள் உயர்வானவை

வாழ்க்கைக் கணக்கு

நல்லவற்றைக் கூட்டிக் கொள்
தீயவற்றைக் கழித்துக் கொள்
அன்பைப் பெருக்கிக் கொள்
நல் வாழ்க்கையை வகுத்துக் கொள்

மனிதப்பிறவி

ஜனனம் என்பது தாய் தந்தையின் படைப்பு
மரணம் என்பது இறைவனின் அழைப்பு
இடைப்பட்ட வாழ்க்கை அத்தனையும் நடிப்பு

செயல்கள்

நாம் நம் செயல்களைத் தீர்மானிக்கின்றோம்
நம் செயல்கள் நம்மை தீர்மானிக்கின்றன.

பயனில்லா ஏழு

ஆபத்துக்கு உதவா நண்பன்
அரும்பசிக்கு உதவா அன்னம்
பெற்றோர் சொல் கேளாப் பிள்ளை
தரித்திரம் அறியாப் பெண்டிர்
வறியோர்க்கு உதவாப் பொருள்
எழுத்தறிவில்லாப் பிறவி
பிறருக்கு உதவா வாழ்க்கை

கொடுப்பதும் தடுப்பதும்

இறைவன் கொடுப்பதை
யாராலும் தடுக்க முடியாது
இறைவன் தடுப்பதை
யாராலும் கொடுக்கமுடியாது

நற்குணம்

விட்டுக் கொடுப்பவன்
கெட்டுப் போவதில்லை
கெட்டுப் போனவன்
விட்டுக் கொடுத்ததில்லை

விடாமுயற்சி

மிகப் பெரிய சாதனைகள்
சாதிக்கப் படுவது
வலிமையினால் அல்ல
விடா முயற்சியால் தான்

பொறுமை

தண்ணீரையும் சல்லடையில்
எடுத்துச் செல்லலாம்
அது பனிக்கட்டியாக உறையும் வரை
பொறுத்து இருப்போமேயானால்

வாழ்க்கை

மனிதன் சொல்ல இறைவன் கேட்பது
– திருவாசகம்
இறைவன் சொல்ல மனிதன் கேட்பது
– கீதை
மனிதன் சொல்ல மனிதன் கேட்பது
– குறள்
அருளாளன் சொல்ல ஞானிகள் கேட்பது
– திருவருட்பா
ஞானி சொல்ல ஞானிகள் கேட்பது
– திருமந்திரம்
மகன் சொல்ல மகேசன் கேட்பது
– பிரணவம்
நல் மனைவி சொல்ல கணவன் கேட்பது
– வாழ்க்கை

உ

அருள்மிகு முருகன் துணை

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மஹேஸ்வர பூசை மற்றும் திருக்குட நன்னீராட்டு விழா நடந்த நாட்கள்

நகரத்தார் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் மகேச்வர பூசைகள் நடந்த ஆண்டுகள்

1.	11-08-1965	விசுவாவசு ஞு	ஆடி 27 உ
2.	26-07-1972	பரிதாபி ஞு	ஆடி 11 உ
3.	07-08-1979	சித்தார்த்தி ஞு	ஆடி 22 உ
4.	21-07-1986	அட்ஷய ஞு	ஆடி 5 உ
5.	02-09-1993	ஸ்ரீமுக ஞு	ஆடி 17 உ
6.	14-08-2000	விக்ரம ஞு	ஆடி 30 உ
7.	21-07-2005	பார்த்திப ஞு	ஆடி 5 உ
8.	25-07-2010	விக்ருதி ஞு	ஆடி 9 உ

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடந்த நாட்கள்

1.	09-07-1905	விசுவாவசு ஞு	ஆனி 26 உ
2.	05-07-1928	விபவ ஞு	ஆனி 22 உ
3.	08-02-1935	பவ ஞு	தை 21 உ
4.	28-04-1961	பிலவ ஞு	சித்திரை 16 உ
5.	14-09-1978	காளயுக்தி ஞு	ஆவணி 25 உ
6.	01-02-1998	ஈஸ்வர ஞு	தை 19 உ
7.	25-05-2012	நந்தன ஞு	வைகாசி 12 உ

கேள்விக்குப் பதில்



(உரைநடைக் கவிதை)

– இராம. விசுவநாதன்,

கங்கை காவேரி வாணிகத் தொடர்பு, மதுரை


பிறவி எடுத்தோர் யாவரும்
பாரினில் பாடுபட்டுப் பிழைப்போரே
மழலைப் பருவத்தில் மலர்ந்த
முகத்துடன் தவழும் குழந்தை
இன்னார் இனியார் யாவரையும்
கவரும் பான்மை அற்புதமே
குழந்தையைக் கொண்டாடும் மானிடம்
வளர்கையில் மாசுற்றுத் தூசாவதேன்?
அண்ணன் தம்பி விளையாட்டு
அடிக்கடி சண்டையால் பகையாகாது
அகவை கூட மனப்போக்கில் மாறுதல்
நிகழ்வதை நீக்கிட வழியாயில்லை?
ஆண்டுகள் சென்றிட அண்ணன் தம்பி
அக்கா தங்கை தனித்தனி ஆயினர்
தாயும் தந்தையும் தனிவீட்டில்
தனியன் மனத்தினில் ஈரமில்லை
வணிகம் செய்யும் மேலோர்
ஆதாயம் இழப்புக்கு ஆளாவர்
பணத்தை மட்டும் நம்புவார்
இழப்பில் மிகுதியும் இடர்ப்படுவர்
விரைவில் கட்டினார் வீட்டினை
அடித்தளம் போடுவதில் அக்கறைகுறைவு
விடும் நாளா வட்டத்தில்
விரியல் கண்டது அதிர்ந்தனர்
மகிழ்வுந்தும் மயிலினும் வேகமாகப்
பறக்கவே இயக்கும் பான்மையரை
வேகமும் வீழ்த்தியது ஓர் நாளில்
காயத்தை ஆற்றிக் காயம் காத்தார்

‘‘பருவத்தே பயிர்செய்’’ வாழ்வியல்
பருவகாலத்தில் மானிடரே திசைதப்பாதீர்
இளமையில் கற்ற கல்வியால்
தாய் தந்தை காட்டிய நன்னெறியால்
மனமும் மதியும் ஆய்ந்திட
வானூர்திக்கு திசைகாட்டும் கருவி ஒப்ப
தேர்ந்து தெளிந்து தெரிந்து
துணைதேடித் துணையராகியே இணைவீர்
இணக்கம் அறிந்து இயங்கும்
இல்லறம் இன்சுவைதரும் மங்கலம்
இல்லறம் ஏற்கும் நன்மக்கள்
தொழில்கள் செய்து பொருள் சேர்ப்பர்
நல்வழி சேர்க்கும் பொருள்
வாழ்க்கையை வளமாக்கும் கருவூலம்
இயற்கையில் ஓடும் ஆறுகளை
மாசுபடுத்தும் மக்களை என்னென்போம்?
உலகம் வெப்பமயம் ஆவதை
அறியும் அறிவியலார் தடுக்காரா?
காக்கும் கடல் நீர் அடிக்கடி
நம்மைஆழிப் பேரலையால் தாக்குகிறதே?
பிசின்பொருள் பைகள் தயாரிப்பை
தடை செய்ய ஏனோ தயக்கம்?

வெண் சுருட்டு குழவிச்சுருட்டு பொதுவிடத்தில்
புகைவதில்லை குடிவகைகள் பெருக்கம் ஏனோ?
ஆயிரம் கோடிக்கு அதிபதியும்
முடக்கு வலியால் முடங்கிக் கிடக்கிறாரே?
அரைவயிற்றுக் கஞ்சிக்கு ஆலாய்ப் பறப்பாரும்
ஆலமரத்தடியில் தமைமறந்து தூங்குகிறாரே?
உழைப்புக்குகேற்ற ஊதியம் பெற்றுவருவார்
உறையுளுள் மகிழ்ச்சி உறைகின்றதே
மனச் செம்மை உடையார் வாழ்க்கையில்
வருகின்ற இடரையும் இன்பமென்பார்.
வாழ்க்கையில் துயரங்கள் அலைக்கழிப்பதைக்
கண்டிட்ட சித்தார்த்தர் புத்தரானார்
புத்தர் கண்டிட்ட அவலங்களை
நற்புத்தி கொண்டு அகற்றுவோம்
இனாமாய்த் தருவதை ஏற்காதீர்

உழைப்பின்றிப் பெறுவதும் ஊழலே
துன்பம் வாட்டி எடுக்கையில்
அடுத்து இன்பம்வரும் எனநினைவீர்
எக்காரணம் கொண்டும் வாழ்க்கையை
இகழாதீர் வறுமைக்கு ஆளாகாதீர்
வாழ்வியல் உட்கருத்தை திருவள்ளுவர்
கூறுவதைக் கவர்ந்து பாரப்பீர்
''இடும்பைக்கு இடும்பை படுப்பர்
இடும்பைக்கு இடும்பை படாதவர்''
வாழ்க்கையில் இன்பதுன்பம் உளதா?
இரண்டையும் அனுபவிப்பதே வாழ்க்கை
கேள்விக்குப் பதில் ஒத்து வருதா?
ஒத்துப்போகும் வாழ்க்கையே உயர்வாகும்
நல்லாரைக் காண்பதுவும் நன்றே
ஔவையார் ''நல்வழி''நமைக் காக்கும்வழி
வாழ்க்யையின் சுவையறிந்த யாவரும்
பெறற்கரும் பிறவியைப் போற்றுவோரே.

திருக்கோவில் பணி - ஒரு கண்ணோட்டம்



– சேதுராமன் சாத்தப்பன்,

இருப்பு : மும்பை

09-07-1905 - ம் ஆண்டு நடைபெற்ற முதல் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவிற்குப் பிறகு நடைபெற்ற விபவ ஆண்டு ஆனி மாதம் 23 உ (05-02-1928)ல் இரண்டாவது திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா, பவ ஆண்டு தை மாதம் 26 உ (03-02-1935) ல் நடைபெற்ற மூன்றாவது நன்னீராட்டுப் பெருவிழா, பிலவ ஆண்டு சித்திரை மாதம் 16 உ (28-04-1961)ல் நடைபெற்ற நான்காவது நன்னீராட்டுப் பெருவிழா, காளயுக்தி ஆண்டு ஆவணி மாதம் 29 உ (14-09-1978) ல் நடைபெற்ற ஐந்தாவது நன்னீராட்டுப் பெருவிழாக் காலங்களில் திருக்கோவிலின் மேல்புறம் தென்புறம் மற்றும் வலது புறத்து இடங்கள் சேர்க்கப்பட்டு நெற்குப்பை நகரத்தார்கள் பெரும் பணம் நன்கொடையாக வழங்கியதால் திருக்கோவில் இன்றைய நிலையில் ராஜ கோபுரத்துடனும் பதின்மூன்று கோபுரங்களுடனும் தரைதளங்கள் கிரானைட் கற்கள் போடப்பட்டும் மிக அழகுடன் திகழ்கிறது.

ஏழாவது நன்னீராட்டுப் பெருவிழாவும் நந்தன ஆண்டு வைகாசி மாதம் 12 உ (25-05-2012) வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியிலிருந்து 9-45 மணியளவில் சிறப்புற நடைபெற்றது.

நன்னீராட்டுப் பெருவிழா வேலைகளை முன்னர் பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த திரு. செ. மு. முத்துப்பழனியப்ப செட்டியாரவர்களும், நேமங்கோவிலைச் சேர்ந்த சு.ப. சுப்பிரமணியன் செட்டியாரவர்களும், தற்போது சூரக்குடிக்கோவிலைச் சேர்ந்த திரு. மு. திருநாவுக்கரசு செட்டியார் அவர்களும் தங்கள் சொந்த வேலையைப் பார்ப்பது போல் கண்ணும் கருத்துமாக மேற்பார்த்து உதவி இருக்கிறார்கள். நன்னீராட்டுப் பெருவிழாக்களுக்கு தாராளமாக நிதி தந்து உதவிய நகரத்தார்களுக்கும் நிதியும் தந்து உடல் உழைப்பையும் தந்து நமது நெற்குப்பை அருள்மிகு வள்ளி தேவயானை சமேத சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குப் பெருமை சேர்த்த நகரத்தார்களுக்கும் நமது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். நெற்குப்பை நகரத்தார்கள் மேலும் எல்லாச் செல்வங்களும் அருள்மிகு சுப்பிரமணியர் அருளால் கிடைக்கப்பெற்று நன்கு புகழுடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரியட்டும்.

நெற்குப்பை நகரத்தார்களின் முகவரிக் கையேடு:

திரு. பழ. வைரவன் அவர்கள் பலரிடம் நிதி உதவி பெற்று திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் உதவியுடன் நெற்குப்பை நகரத்தார்களின் உள்ளூர் முகவரி, வசிக்கும் இட முகவரி, இரண்டு ஊர்களின் தொலைபேசி எண்கள், குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் பெயர்கள், வயது படிப்பு எல்லா விபரங்களையும் மிகுந்த முயற்சி எடுத்து நல்ல முறையில் தயாரித்து நகரத்தார் எல்லோருக்கும் 2000 - ம் வருடத்திலும் 2004 - ம் வருடத்திலும் மீண்டும் புதிப்பித்து 2011 - ம் வருடத்திலும் இலவசமாக வழங்கியுள்ளார்கள்.

அவர்கள் இருவரின் கடுமையான உழைப்புக்கும் முயற்சிக்கும் நாம் அவர்களைப் பெருமைப் படுத்திப் பாராட்டுவோம். காரணம் பெருமைப் படுத்துவதும் பாராட்டுவதும் அவர்களை மீண்டும் மீண்டும் நல்ல காரியங்கள் செய்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் நகரத்தார்கள் வாழும் 76 ஊர்களிலும் இந்த அளவு விவரங்களுடன் யாரும் கையேடு தயாரித்து இருக்கமாட்டார்கள் என்பதே உண்மை. இது மிகைப்படுத்தப்பட்டது அல்ல. எனவே அவர்கள் இருவரின் முயற்சியையும் நல்ல எண்ணத்தையும் பெருமைப்படுத்திப் பாராட்டுவோம்.

நெற்குப்பை சிவன் கோயில்



பாரியின் தலைநகரான பிரான்மலைக்கு அருகேயுள்ள ஒரு கோயிலிலிருந்து கொண்டுவரப் பெற்ற சிவலிங்கம் நெற்குப்பையில் பிரதிட்டை செய்யப்பட்டது. இதை வைத்துக் கட்டப்பட்டதே இன்றையச் சிவன்கோயில் இறைவன் **மனமொத்த கண்டீசுவரர்**; இறைவி **மரகதவல்லி** 1936 - ல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது கண்டீசுவரருக்குக் கீழே நடராசர், சம்பந்தர் திருவுருவங்கள் தோண்டி எடுக்கப் பெற்றன. இவை பத்தாம் நூற்றாண்டுக்கு முந்தியன என்று பிரஞ்சுப் புதைபொருள் அறிஞர் பிலியோசா கூறுகிறார். இக்கோயில் சிவகெங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்தது.

நெற்குப்பையில் பிடாரியம்மன் (மகிடாசுரமர்த்தினி), அழகிய நாச்சியம்மன், மாணிக்க நாச்சியம்மன் கோயில்கள் உள்ளன. இவ்வூரிலிருந்த ஒரு துர்க்கையின் திருவுருவம் சென்னை மியூசியத்தில் கொலுவீற்றிருக்கிறது.

நன்றி - ஆனந்தவிகடன் - 21-08-1969

அகந்தை அன்பிற்குப் பகை



- கே.ஆர்.சுந்தரம்

ஆசிரியர் - திருவாசகத் தெள்ளமுது

உலகில் வாழும் ஆன்மாக்களுக்குப் பற்றினால் பிறவியும் அந்தப் பிறவியினால் பலவகைத் துன்பங்களும் உண்டாகின்றன. அந்தப் பற்று இருவகைப்படும். 'யான்', 'எனது', என்பவை அவை. அவற்றை அகப்பற்று, புறப்பற்று என்பார்கள். வடமொழியில் 'அகங்காரம்','மமகாரம்' என்று கூறுவார்கள். 'நான்' என்பது ஒரு பொருள். எனது என்று சொல்பவை பல பொருள்கள். முதலில் நான் என்பது தோன்றிப் பின்னர் எனது என்பது தோன்றுகிறது. இவ்விரு பற்றுக்களும் அற்ற நிலையே உயிர்க்கு இன்பம் பயக்கும் நிலை. ஆனால் உயிர்கள் இவ்விரு பற்றுக்களிலும் ஈடுபட்டு உழல்கின்றன.

"ஊன் கெட்டு உயிர் கெட்டு என் உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ".

என்று மணிவாசகம் பேசும். ஊனாகிய உடம்பு, ஆவி ஆகியவற்றைப் பற்றிய நினைவு ஒடுங்கித் தற்போத நிலை நீங்குகின்ற போது 'நான்' என்பது கெட்டு விடுகிறது.

ஒரு விதை - தன்னை அழித்துக் கொண்டுதான் மரமாகிறது
ஒரு மழைத்துளி - தன்னை இழந்த பின்பே கடலாகிறது
கடல் சிப்பி - தன்னை இழந்த பின்பே முத்தாகிறது
கதலிக் கன்று - தன்னை இழந்த பின்பே கனி தருகிறது

ஆனால் மனிதன் மட்டும் தன்னை இழக்கத் தயாரில்லை. எந்த நிலையிலும் அதாவது ஆழ்ந்த மயக்கத்திலும் கூட மனிதனிடமுள்ள இந்த 'நான்' எனும் உணர்வு கெடுவதில்லை. மனிதனுக்குப் பருப்பொருளாக அமைந்தது பொறிகளுடன் கூடிய உடம்பு. அந்த உடம்பினுள் நுண்மையாக அமைந்தவை நான்கு. அந்தக் கரணங்களும், அவற்றுள் உணர்வு தோன்றுமிடம் சித்தம். அதனையும் தாண்டி நிற்பது அகங்காரமாகிய 'நான்'. இறை அனுபவம் பூரணமாகக் கிட்டுகின்ற போது 'நான்'. 'எனது' என்பவை அழிகின்றன. அழிகின்றன என்றால் இல்லாமல் போகின்றன. திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் 'நான்' என்பதைக் கெட்டுப் போகச் செய்தவர்.

கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவது போல, இறைவன் திருவடியைப் போற்றி வணங்குவதைத் தவிர வேறு எதுவும் வேண்டாமென்று ஒதுக்கியவர் மாணிக்கவாசகர்.

வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்புச் சிவம்
வேண்டார் தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம் போகேன் இனிப்
புறம் போகல் ஒட்டேனே

இது மாணிக்கவாசகரின் தூய, பற்றற்ற வாழ்க்கைக்கு அளவு கோல். மணிவாசகரது துறவின் முதிர்ச்சியும் அன்பு நிறைந்த ஆர்வமும், பண் சுமந்த தமிழும் ஒன்று சேர்ந்து திருவாசகத்தைச் சிறந்ததொரு சமயப் பனுவல் ஆக்கிவிட்டன. அதனாலேயே ''திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்ற பழமொழி உண்டாயிற்று.

இன்று மண்ணையும் பொன்னையும் விரும்பாதவர்கள் கூடப் புகழை விரும்புகிறார்கள். ஆனால் புகழ் விருப்பம் கூட மனிதனைக் கெடுத்து வீழ்த்திவிடும்; அகந்தையை உண்டாக்கும் என்பதே அற நெறி முடிவு. புகழ் அகந்தையை உண்டாக்கும். பற்றினை ஒழித்தவர்களால் கூட அகந்தையை ஒழிக்க முடியாத நிலையை இன்று நாம் காண்கிறோம். அகங்காரம், அகந்தை அல்லது செருக்கு அகல்கின்ற போது விண்ணவர்களுக்கும் கிட்டாத பெருவாழ்வு கிட்ட வாய்ப்பு உள்ளது என்பான் வள்ளுவப் பேராசான்.

யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் – திருக்குறள்

செருக்கினால் இவ்வுலகில் நிகழ்ந்த கலகங்கள் எத்தனை? மோதல்கள் எத்தனை? போடப்பட்ட வேலிகள் எத்தனை? மூடப்பட்ட கதவுகள் எத்தனை? எழுப்பப்பட்ட சுவர்கள் எத்தனை? 'யான்' 'எனது' என்பன உடன்பிறப்புக்களை உற்றவரைப் பிரிக்கும். சிறு குழந்தையின் விளையாட்டுப் பொம்மையில் தொடங்கும் 'எனது' என்பது வீட்டின் நடுவே குறுக்குச் சுவர் எழுப்பும் வரை நீள்கிறது. நட்பு காதல் அன்பு உறவு. என்னும் அனைத்தும் 'நான்'. 'எனது' என்பனவற்றிற்கு முன் நிற்க முடியாமல் தோற்றுப் போகின்றன.

தனித்துணை நீ நிற்க யான் தருக்கித்
தலையால் நடந்த
வினைத் துணையேனை விடுதி கண்டாய்
வினையேனுடைய
மனத்துணையே எந்தன் வாழ்முதலே
எனக்கு எய்ப்பில் வைப்பே

''எனக்கு உயிர்க்குயிரானவனே, எனக்குச் சேம நிதி போன்றவனே, ஒப்பற்ற மூலப் பொருளாய் நீ இருக்க. நான் செருக்குற்று – நிலை தடுமாறித் திரிந்தேன். இறைவனே, நீ என்னை விட்டு விடாதே'' என்று மனம் கசிந்து வேண்டுவார் மாணிக்கவாசகர்.

நெறி சார்ந்த இனிய வாழ்விற்குச் செருக்கு இடையூறு. இது மனிதனை மனிதக் கூட்டத்தில் இருந்து பிரித்துப் புறம் தள்ளுகிறது. இது பொறாமையின் தாய். சினத்தின் தந்தை. பகைக்கும் வன்முறைக்கும் தோழன். 'எனது' என்பது அற்றால் 'நான்' என்பது அறும். நான் எனது என்பது அற்றால் சன்மார்க்கம் தழைக்கும். செருக்கு சன்மார்க்கத்துக்கு உகந்ததல்ல. செருக்கினை ஒழித்து நன்னெறிகளைக் கடைப்பிடிப்பதே ஆன்மாவின் உயர்வுக்கு வழி.

செருக்கிலிருந்து தப்ப என்ன வழி? மானுடம் என்ற பதம் தந்த வள்ளலை. நமது வாழ்முதலை இறைவனை நினைந்து நினைந்து உருகி அவனுக்கு உடமைப் பொருளாக நம்மைக் கருதி. அகந்தையை ஒழித்து அவனருள் பாலிக்கும் பணிகளைச் செய்து வாழ்தலே வழி. இந்த வழியில் செல்ல நமக்குத் திருவாசகம் உதவும்.

நெற்குப்பை - சிறப்புகள்

புலவர் பெரி. ஆறுமுகம், பி.லிட்.

(1978 குடமுழுக்கு விழா மலரிலிருந்து எடுத்தாளப்பட்டது)

அணிமுத்தம் பலதவழ்ந்து மருதவள நலந்திகழ்ந்து
மணிமுத்து நதிவிளங்கும் நெற்குப்பை நகர்சிறக்கத்
தணிகைமலை விட்டுவந்து மயிலமர்ந்து தண்ணருள்செய்
அணிமுகத்தில் நகைதவழும் அறுமுகவேள் மலர்ந்தாள் காப்பாம்!

1. திருக்கோயிலின் தோற்றமும் வளர்ச்சியும் :

தெய்வத் தொண்டும் செந்தமிழ்த் தொண்டும் அறமெனக் கொண்டு பொருள்தனை வாரி வாரி வழங்கும் மரபினர் மகுட தன வைசிய நாட்டுக் கோட்டை நகரத்தார்கள். இவர்கள் என்றும் தும்பிக்கையான் பாதத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். எண்ணும் பொருளெலாம் எளிதில் முற்றுற நாயகத் தெய்வமாம் விநாயகப் பெருமானை முதற்கண் வணங்குவர். இன்றும் செட்டியார்கள் பிள்ளையார் சுழியிட்டு எழுதுதலும் நினைத்தலும் இதற்கு நல்ல அடையாளமாகும். இம்முறையைக் கொண்டே நகரத்தார்கள் தங்கள் ஊரிலுள்ள கோயில் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப விநாயகப் பெருமான் கோயிலையும் சிவன் கோயிலையும் நிறுவி இறைவழிபாட்டை வழி வழியாக ஏற்படுத்திக் கொண்டார்கள். கோயில் புள்ளிகள் மிகுதியாய் இருக்கும் ஊர்களில் நகரத்தார்கள் சிவாலயம் உண்டாக்கி வழிபட்டு வந்திருக்கிறார்கள்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் வாழ்கின்ற ஊர்களில் நெற்குப்பையும் ஒன்று. இவ்வூரில் சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவன் கோவில் உள்ளது. நகரத்தார்கள் மிகப் பெருமளவில் செய்த உதவியினால் இச்சிவன் கோயில் சிறப்பாகக் கட்டப்பட்டிருக்கிறது.

நகரத்தார்கள் தங்கட்கென ஒரு தனிக்கோயில் அமைத்துக் கொள்வது மரபு. ஏற்கனவே சிவன்கோயில் இருப்பதனால், புதிய கோயில் முருகன் கோயிலாக அமைக்க முடிவு செய்தனர். இப்போது நூலகத்திற்குத் தென்புறம் இருக்கும் சகடைக் கொட்டகையில் நகரத்தார்கள் கூரைக் கட்டடம் அமைத்து அதில் சுப்பிரமணியர் வள்ளியம்மை தெய்வானை திருவாச்சியுடன் செப்பு விக்கிரகமும், செப்பு வேலும், பிள்ளையார் திருவுருவச் சிலையும், வைத்து வழிபட்டு வந்திருக்கிறார்கள். பண்டாரத்தைப் பூசை செய்யும்படி செய்தும் அடிக்கடி நகரத்தார்களால் மேற்படி சுவாமிக்கு மஹேஸ்வர பூசை செய்தும் மிகச் சீரும் சிறப்புமாக நடத்தி வந்திருக்கிறார்கள்.

நகரத்தார் வாழும் பிற ஊர்களில் எல்லாம் சிவன் கோயிலோ விநாயகர் கோயிலோ நகரக் கோயிலாக விளங்க, பொற்குப்பை விளைதரு நெற்குப்பை என்னும் புனிதத் தலத்திலே மட்டும் நகரத்தார்க்கு முருகன் கோயில் அமைந்திருப்பது அருஞ்சிறப்புக்களில் எல்லாம் பெருஞ் சிறப்பாகும்.

பொதுவாக மலை மீது முருகன் மயில் மீது அமர்ந்து, கோயில் கொண்டிருப்பது உண்டு. ஆனால் நீர்மலி குளம்பல கொண்ட நெற்குப்பை மாநகரில் மலையின்றி முருகன் மயிலேறி அமர்ந்து, ஆறு முகமாகி வள்ளியம்மை தெய்வானை அருகிருக்கக் காட்சி தந்து அருள் வழங்குவது இத்தலத்தின் மற்றுமோர் தனிச் சிறப்பாகும். இத்தகைய சிறப்புமிக்க முருகனுக்கு நல்திருப்பணியாம் கல்திருப்பணி செய்ய நல்லுள்ளங்கள் பல எண்ணின. எண்ணம் செயலாயிற்று. ஆலயத் திருப்பணி ஆரம்பமாயிற்று.

சர்வதாரி வருடம் தை மாதம் 24ம் நாள் (5-2-1901) திங்கட்கிழமை சூரிய உதயாதி நாழிகை ஐம்பதேகாலை வீசத்திற்கு மேல் ஐம்பத்து ஐந்தேமுக்காலே வீசம் நாழிகைக்குள் ரேவதி நட்சத்திரம், தனுர் ஓரையில் ஆலயத்திற்குக் கல் திருப்பணி செய்ய முகூர்த்தம் செய்திருக்கிறார்கள்.

கருவறையில் சண்முகர் திருவுருவச் சிலை வைத்தும், முன் கூரைக்கட்டடக் கோயிலில் இருந்த பிள்ளையார், சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை செப்பு விக்கிரக சுவாமிகளை எடுத்து வந்து கல்திருப்பணி ஆலயத்தில் அர்த்த மண்டபத்தில் பிரதிஷ்டை பண்ணியும், பரிவார தெய்வங்களை நிறுவியும், திருப்பிரகாரத்தில் மகேசுவர பூசை செப்புவேலை வைத்தும், விசுவாவசு வருடம் ஆனி மாதம் 26ம் நாள் (9-7-1905) ஞாயிற்றுக்கிழமை அஸ்த நட்சத்திர கன்னிகா ஓரையில் பகல் 12¼க்கு மேல் 15 நாழிகைக்குள் திருக்குட நன்னீராட்டு விழாச் செய்து ஆதி சைவக் குருக்களாகிய அந்தணரைக் கொண்டு பூசை செய்யும்படி செய்தும் நகரத்தார்கள் ஆலயப்பணிகளை நன்முறையில் நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

இதன் பின்னர், கோயிலில் மூன்று கும்பாபிசேகங்கள் கீழ்க்கண்ட நாட்களில் நடைபெற்றுள்ளன :-

2 வது கும்பாபிஷேகம் :

விபவ வருடம் ஆனி மாதம் 23ம் நாள் (5-7-1928) வியாழக்கிழமை திருவோண நட்சத்திரம் சிம்ம இலக்கினத்தில் காலை 7 நாழிகைக்கு மேல் 7½ நாழிக்கைக்குள் அஷ்டபந்தன மகாகும்பாபிசேகம் நடந்திருக்கிறது.

3வது கும்பாபிசேகம் :


பவ வருடம் தை மாதம் 26ம் நாள் வெள்ளிக்கிழமை (3-2-1935) ரேவதி நட்சத்திரம் மீன இலக்கினம் காலை 5½க்கு மேல் 7½ நாழிகைக்குள் அஷ்டபந்தன கும்பாபிசேகம் நடந்திருந்திருக்கிறது.

4 வது கும்பாபிசேகம் மஹாபிசேகம்

பிலவ வருடம் சித்திரை மாதம் 16ம் நாள் (28-4-61) வெள்ளிக்கிழமை அஸ்த நட்சத்திரம் காலை 7½ க்கு மேல் 8½ மணிக்குள் ரிஷப லக்கினத்தில் மருந்து சாத்தி கும்பாபிசேகமும் மஹாபிசேகமும் நடந்திருக்கின்றன.

60-ஆம் ஆண்டு வருசாபிசேகம் :

விசுவாவசு வருடம் ஆனி மாதம் 21ம் நாள் (5.7.1965) திங்கட்கிழமை சப்தமிதிதி அஸ்த



நட்சத்திரம் பகல் மணி 1 க்கு மேல் 1½ க்குள் துலா இலக்கினத்தில் வருடாபிசேகமும் மஹா அபிசேகமும் நடைபெற்றது.

அன்று கேது சந்திரனுக்கு யாகசாலை நடத்தியும் மருந்து சாத்தியும் 108 கும்பங்கள் வைத்தும் வேதபாராயணத்துடன் ஆகம விற்பன்னர்களைக் கொண்டு மஹாபிசேகம் செய்து ஆறுமுகர் உற்சவ விக்கிரகத்தை அலங்கரித்துத் திருவீதி உலாவும் நடத்தப் பெற்றது.

மன்மத வருடம் ஆனி மாதம் 13ம் நாள் (27-6-1955) வருடாபிசேகத்திலிருந்து சுவாமி பெரிய வீதியை (மெயின் ரோடு) வலம் வருகிறது.

2. திருக்கோயில் நிருவாக வரலாறு

நெற்குப்பையில் நகரத்தாரின் 9 கோயில் பிரிவுகளில் வேலங்குடி, இலுப்பைக்குடிக் கோயில் தவிர ஏனைய 7வகைப் பிரிவினரும் வாழ்ந்து வருகின்றனர்.

நகரத்தார்கள் கோயில் நடைமுறைகளை மணியக்காரர் ஒருவரை நியமித்துப் பார்த்து வந்தார்கள். தாரண வருடம் வைகாசி மாதம் 13 ம் நாள் (26-5-1944) முதல் நகரத்தார்களே நேரடியாகப் பார்க்க விரும்பி இளையாத்தங்குடிக் கழனிவாசல் தெ. பெரி. பெரியணன் செட்டியாரையும், இளையாத்தங்குடிக் கிங்கிணிக்கூர் கரு. சா. கருப்பன்செட்டியார் என்ற வெள்ளையன் செட்டியாரையும் பார்த்துவரச் சொல்லி, அதன்படி அவர்கள் பார்த்து வந்திருக்கிறார்கள்.

கோயில் செயல்கள் நன்முறையில் நடைபெற நகரத்தார்கள் சிந்தித்து பத்துக் கரைகளாகப் பகுக்கப் பெற்றனர். எனவே தாது வருடம் ஆனி மாதம் 17 ம் நாள் (30-6-1936) பேசி எழுதிக் கட்டியிருக்கும் ஓலைச்சுவடி அட்டவணைப்படி பத்துக்கரையினரும் ஆண்டிற்கு இருகரைகளாகக் காரியத்தனம் பார்த்து வந்தனர். ஒவ்வோராண்டின் முடிவிலும் நகரத்தார்கள் கூடி, முந்தைய ஆண்டிற் காரியத்தனம் பார்த்து வந்தவர்களிடமிருந்து அடுத்த ஆண்டு காரியத்தனம் பார்க்க வேண்டியவர்களிடம் நிருவாகத்தை மாற்றி ஒப்பிப்பது என்ற நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. இவ்வாறு நிருவாகம் முதலில் கார்த்திகை மாதமும் பின்னர் ஆவணிமாதமும் இப்போது புரட்டாசி மாதமும் மாறுதல் பெற்று வருகிறது.


புதிதாக நடப்புக் காரியத்தனம் வேண்டுமென்று துக.மு.மு வகையினர். பழ. வெ. வகையினர், முத்து. கு.மு.வகையினர், மு. ராமு. மு வகையினர் ஆகிய நான்கு கரைகள் கேட்டுக் கொண்டதை ஒப்புக்கொண்டு ஏற்கனவே காரியத்தனம் பார்க்கும் பத்துவகைக் காரியக்காரார் பெயர்களையும் எழுதித் திருவுளச் சீட்டு எடுத்ததில் பின்கண்டபடி வந்து :

முதலாமாண்டு

1. முத்து கு. மு. வகை
   (இரணிக்கோயில்)
   து.க.மு. வகை
   (ஓக்கூர் கோயில்)

இரண்டாம் ஆண்டு

2. ராம. சா. வகை
   (கிங்கிணிக்கூருடயார்)
   பெரி. ந. வகை
   (வயிரவன் கோயில்)



மூன்றாம் ஆண்டு

3. மு. ராம. மு. வகை
(இரணிக் கோயில்)
பழ.வெ. வகை
(பட்டணசாமி)

நான்காம் ஆண்டு

4. தெ. பெ. வகை
(கழநிவாசல்)
மு. செ. வகை
(பிள்ளையார்பட்டி)

ஐந்தாம் ஆண்டு

5. கு. பழ. ப. ப. வகை
(நேமங்கோயில்)
பழ. ப. வகை
(மாத்தூர்க் கோயில்)

ஆறாம் ஆண்டு

6. முரு. பழ. வகை
(இரணிக் கோயில்)
சுப. ராம. வகை
(சூரக்குடி கோயில்)

ஏழாம் ஆண்டு

7. ந. பழ. வகை
(இரணிக்கோயில்)
ப. ராம. லெ. வகை
(நேமங் கோயில்)

இப்போது மேலே கண்ட முறைப்படி கோயில் நிருவாகத்தை ஆண்டுக்கு இரு வகையினராகப் பார்த்து வருகிறார்கள்.

3. சிறப்புச் செய்திகள்.


அலங்கார வளைவு: (Arch)

1925 ஆம் ஆண்டு (ஆனந்த வருசம்) பாதரக்குடி சாமியார் நெற்குப்பைக்கு வந்து உபதேசம் செய்தார்கள். அவர்கள் உபதேசத் தைக் கேட்பதற்கு வெளியூர்களிலிருந்தும், வெளிநாடு களிலிருந்தும் நகரத்தார்கள் சிறப்பான முறையில் வருகை தந்தார்கள். அதன் நினைவாகச் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு முன்பு இரும்பு அலங்கார வளைவு (Arch) போடப் பட்டது. இந்த அலங்கார வளைவு இன்றும் ஊருக்கு அணி செய்கிறது.

நகர மடம் :

நகரக்கோயில் மண்டபத்தில் நகரக்கூட்டம் நடைபெற்று வந்தது. பின்னர் நகரத்தார்கள் கூடுவதற்குக் கோயிலின் தென் பக்கம் ஓட்டுக் கூடமாகச் செய்ய விக்கிரம, தை 4ம் நாள் வெள்ளிக்கிழமை முடிவு செய்து விக்கிரம, தை 6 ம்நாள் (19-1-1941) ஞாயிற்றுக்கிழமை அஸ்த நட்சத்திரம் சப்தமி திதியில் காலை 8க்கு மேல் 9மணியளவில் கும்பஓரையில் தச்சு செய்திருக்கிறார்கள்.

இரணிக்கோயில் முரு. பழ.மு.முரு. முருகப்ப செட்டியார் என்ற சொக்கலிங்கம் செட்டியார், தம் செலவில் நகரமடம் கட்டி மின்விளக்குப் போட்டு நகரத்தாரிடம் ஒப்புவிக்க முன்வந்தார்கள். அதன்படி விசு வருடம் சித்திரை மாதம் 25 ம்நாள் (17-5-1941) நகரத்தார் மடம் நான்கு மாதங்களுக்குள் அழகியதொரு கட்டடமாக உருப்பெற்று ஒப்படைக்கப் பெற்றது. இம்மடம் கோயிலின் அருகில் அமைந்திருப்பதும், பல நற்செயல்களுக்குப் பயன்பெற்று வருவதும்



குறிப்பிடத்தக்கதாகும். மாப்பிள்ளை வந்திறங்கவும் பெண் அழைக்கவும், நகரக் கூட்டங்கள் நடத்தவும், ஐயப்பன் பஜனையை ஆண்டுதோறும் நடத்தி இருமுடிகட்டவும், அழகிய நல்மடம் நன்கு பயன்பட்டு வருகிறது. பொதுவாகக் கோயில் நிருவாகமே இங்கிருந்து தான் இயங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

சண்முக விலாச வாசக சாலை :

நெற்குப்பை நகரத்தார் இளைஞர்கள் ஊக்கமும் ஆக்கமும் மிகுந்தவர்கள். எண்ணியதை எளிதில் செய்யும் நல்லெண்ணம் கொண்டவர்கள். 1926ல் மிகச் சிறிய அளவிலே ஆரம்பிக்கப்பட்ட சண்முக விலாச வாசகசாலை வளர்ச்சியில் கண்ணும் கருத்தும் கொண்டவர்கள். அவ்வாசகசாலைக் குரிய கட்டிடத்தை ந. பழ. ந. கரு. இராமஞ் செட்டியார் மேற்பார்வையில் இளைஞர்களே பணியாற்றி புதூரணி தென் மேற்கில் 1926ல் கட்டியிருப்பது அவர்களது உழைப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். அருகில் இருக்கும் கிணற்றையும் இளைஞர்களே உண்டாக்கி இருக்கிறார்கள். நெற்குப்பையில் மாவட்ட நூலக ஆணைக் குழுவின் சார்பில் நூலகம் அமைக்கப்பட்ட காரணத்தால், சண்முக விலாச வாசக சாலை நகரத்தார் சங்கத்தில் ஒப்புவிக்கப்பட்டது. இப்போது இக்கட்டிடம் பேரூராட்சி மன்றத்திற்கு வாடகைக்கு விடப் பட்டிருக்கிறது.

தேவாரப் பாட சாலை :

இக்கோயிலின் தென்புறக் கூடத்தில், நெடு நாட்களாகத் தேவாரப் பாடசாலை ஒன்று இயங்கி வந்தது. நகரத்தார் இளைஞர் பலர் இதனால் தேவாரம் பாடுவதில் இளமையிலேயே நல்ல பயிற்சி பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

நகரத்தார் நற்பணி :

உயர்நிலைப்பள்ளி, குடிநீர்வசதி, ஆரம்ப சுகாதார நிலையம் முதலிய வசதிகளும் உள்ளூர் நகரத்தார் நல்மனத்தால் மலர்ந்தவை. நகரத்தார்கள் இலவசமாக வழங்கிய ஐந்து ஏக்கர் நிலத்தில் திருப்புத்தூர் பஞ்சாயத்து யூனியன் வட்டார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் நகரின் வடமேற்கில் இயங்கி வருகிறது. இப்பணி சிறப்புறவும், இதற்குரிய நிலத்திற்கு நன்கொடை பெறவும், துணைத் தபால் நிலையம் கொண்டு வரவும், தொலைபேசி நிலையம் அமைக்கவும் நகரத்தார் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். அதன்பயனாய் சுபகிருது ஆனி 11 ம் நாள் (25-6-62) துணைத் தபால் நிலையம் திறக்கப் பெற்றது. இதற்காக நகரத்தார்கள் சங்கத்திலிருந்து கட்டடம் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். சோபகிருது மாசி 28 ம் நாள் (30-9-1969) ஆம் நாளிலிருந்து தொலைபேசி நிலையமும் செயல்பட்டு வருகின்றது.

லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கீழ்த்திசைத் தலைவராக நியமிக்கப் பெற்றமைக்கும், 11-6-56ல் ராம. சா. குடும்பத்தாரின் பொருள் உதவியால் சாத்தப்பா அரசு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தியமைக்கும், 21-3-66 ல் சுப. அ. பழ. பழநியப்ப செட்டியார் நன்கொடையால் 'அலர்மேலு பழநியப்பா' மருத்துவமனைக் கட்டடத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கியமைக்கும் நகரத்தார்கள் பாராட்டு விழா வைத்துப் பாராட்டிதழ் வழங்கினர். (இவ்வரவேற்பிதழ் பாராட்டுரைகள் இம்மலரின் வேறுபக்கங்களில் இடம் பெற்றுள்ளன.)

4. கோயில் விழாக்களின் உபய வரலாறு

சித்திரை — வருடப் பிறப்பு :

நெற்குப்பை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில், இளையாத்தங்குடி ஒக்கூர்ப் பிரிவு துக. மு. மு. பெரியண்ணன் செட்டியார் அவர்களும், நேமங்கோயில் கு. பழ. சு. பழ. சுப. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களும் மன்மத, துன்முகி (1955, 1956) ஆகிய இருஆண்டுகளிலும் சித்திரை முதல் நாளில் இவ்விழாவைச் சேர்ந்து நடத்தினார்கள். பின்னர் தனித் தனியே ஆளுக்கொரு ஆண்டாக மாற்றி மாற்றி இவ்விழாவை நடத்தி வருவது என்று முடிவு செய்து, அதன் படி ஏவிளம்பி(1957) ஆண்டு முதல் நடத்தி வருகிறார்கள்.

நெற்குப்பை நகரத்தார் சமூகப் பெண் மக்கள் ஒன்றுபட்டு, ந. பழ. வகையினர் முயற்சியால் சித்திரை மாத இறுதியில் கழிவு-தொடுப்பு சாந்திக்காக ஸ்ரீ முருகப் பெருமான் கோயிலில் செய்யும் அபிஷேக ஆராதனை கண் கொள்ளாக் காட்சியாகும்.

வைகாசி விசாகம் :

இளையாத்தங்குடி கோயில் கழனிவாசற்குடி நகரத்தார் முருகனுக்கே உரித்தான விழாவான விசாகத் திருநாளைப் பொதுவில் 1921 முதல் நடத்தி வருகிறார்கள். கழனிவாசற்குடியினர் மூன்று கரையாக,ஆண்டுதோறும் ஒருவர் மாற்றி ஒருவர் பொறுப்பேற்று இத்திருவிழாவை முறையே மேற்பார்வை செய்து கொண்டாடி வருகின்றனர். வைகாசி விசாகத்தன்று ஸ்ரீ முருகப்பெருமான் மணிமுத்தாற்றுக்கு எழுந்தருளப் பெற்றுத் தீர்த்தம் கொடுப்பது வழக்கம். இவ்விழாவை 7-6-1971-ல் பொன் விழாவாகக் கொண்டாடி மலர் வெளியிட்டனர்.

ஆனித் திங்கள் தேரோட்டத்தில் மண்டகப்படியும் தண்ணீர்ப் பந்தலும் :

பறியாமருந்துபட்டி ஸ்ரீ சேவுகப்பெருமாள் கோயிலில் தேர்த்திருவிழாவை முன்னிட்டுப் பத்து நாட்கள் நடைபெறும் மண்டகப்படியில் ஆறாவது மண்டகப்படியை நெற்குப்பை நகரத்தார்கள் நடத்துவது குறிப்பிடத்தக்கது,

தண்ணீர்ப்பந்தல் வைப்பது மிகச் சிறந்த அறம் என்பதறிந்த நகரத்தார்கள் பறியாமருந்துபட்டித் தேரோட்டத்தன்று, தண்ணீர்ப்பந்தல் வைத்து ஆண்டுதோறும் நடத்தி வருகிறார்கள்.

புரட்டாசி—நவராத்திரி, மகார் நோன்பு விழா:—

இளையாத்தங்குடிக் கோயில் கிங்கிணிக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த இராமன் செட்டியார் மகன் சாத்தப்பசெட்டியார் அவர்களால் பொய்யான் கூடத்தில் 1870 முதல் தண்ணீர்ப் பந்தல் நடத்தி வரப்பெற்றது. பின்னர் சுப்பிரமணிய சுவாமி கோயில் கூரைக்கூடத்தில் இந்த அறச்செயல் தொடர்ந்து நடைபெற்று வந்தது. சாத்தப்ப செட்டியாருக்குப் பிறகு 1875 ஆம் ஆண்டு அவருடைய மக்கள் இராமன் செட்டியார், கருப்பன் செட்டியார், பழநியப்ப செட்டியார் ஆகிய மூவரும் தனியாக ஓர்இடம் வாங்கி ஈஸ்வர வருடம் சித்திரை மாதம் 23 ம் நாள் (4-5-1877) கட்டம் கட்டி இராம. சா. மடம் என்று நிறுவி, தண்ணீர்ப்பந்தலும் நந்தவனமும் ஏற்பாடு செய்து நடத்திவந்தார்கள். இந்த நந்தவனத்திலிருந்து நாள்தோறும் முருகப் பெருமானுக்கு மலர்களும் மலர்மாலைகளும் பூசைக்காக வருவது மிகப் பெருஞ்சிறப்பாகும். பிறகு இந்த அறநிலையம் விரிவு செய்யப்பெற்று

துவாதசிதோறும் அந்தணர்களுக்கும் எளியோர்களுக்கும் அன்னதானம் வழங்கப் பெற்றது.

சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 9 நாட்கள் நவராத்திரிவிழா நடத்தியும், விஜய தசமி அன்று இராம. சா. மடத்தில் சுப்பிரமணிய சுவாமி எழுந்தருளப் பெற்று உற்சவ ஆராதனை நடத்தியும் சிறப்புற மண்டகப்படி செய்கிறார்கள். 25-5-1977ல் நூற்றாண்டு விழாக் கொண்டாடிச் சிறப்பு மலரும் வெளியிட்டிருக்கிறார்கள்.

திருக்கார்த்திகை :-

எல்லா நாளும் எழில் முருகனுக்கு உகந்த நாளே ஆயினும், கார்த்திகைத் திருநாள் மிகச் சிறந்த நாள் ஆகும். அக்கார்த்திகைநாளில், சூரக்குடிக் கோயிலைச் சேர்ந்த உயர்திரு சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் வேலுக்குப் பூசை செய்து அன்னதானம் செய்தார்கள். அவர்தம் உயர்ந்த உள்ளத்தில் உதித்துச் செயல் பெற்று வந்த அப்பெருங்கொடைச் செயலை அவர் வழி வந்தவர்களும் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். எனவே இப்பரம்பரையினரை **கார்த்திகைச் சுப்பிரமணியன் செட்டியார் விடு** என்று அழைப்பதுண்டு.

இம்மரபினர் மாதந்தோறும் வரும் கார்த்திகையையும், கார்த்திகை மாதத்தில் வரும் திருக்கார்த்திகைத் திருநாளையும் பரம்பரையாகக் கோயிலில் நடத்தி வருகிறார்கள்.

மேலே சொல்லப்பெற்ற சூரக்குடிக் கோயில் நகரத்தார்கள் கார்த்திகைக்கு ஸ்ரீ முருகன் கிருபையால் அழகே உருவான மயில்வாகனம் ஒன்று இப்போது செய்து நன்கொடையாக நகரத்தார்க்கு அளித்திருக்கிறார்கள்.

மாதந்தோறும் நடைபெறும் கார்த்திகையில், ஆடிக் கார்த்திகையை இளையாத்தங்குடி கிங்கிணிக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த சா. பழ. சொ, குடும்பத்தார்களும், தைக் கார்த்திகையை இளையாத்தங்குடி கழனிவாசற்குடி பிரிவைச் சேர்ந்த தெ.சு. மு.சுப்பிரமணியன் செட்டியார் அவர்களும் இப்பொழுது செய்து வருகிறார்கள்,

கார்த்திகை-சோமவாரம் :

இரணிக்கோயில் முரு.பழ. குடும்பத்தாரால் சுமார் அறுபது ஆண்டுகளாக சோமவாரம் செய்யப்பெற்று வருகிறது. ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் கொண்டாடப்பெறும் இச் சோமவாரத்தில் 108 சங்காபிஷேகமும் சண்முகா அர்ச்சனையும் காணப் பெருந்திரளாக மக்கள் கூடுவர்.

மார்கழி -திருப்பள்ளி எழுச்சி :

மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சி நாள்தோறும் கோயிலில் கொண்டாடப் பெறுகிறது. இத்திருப்பள்ளி எழுச்சி நாட்களில் நகரத்தார்களில் விரும்பியவர்கள் அபிஷேக ஆராதனை செய்கிறார்கள். உபயம் இல்லாத நாட்களில் நெற்குப்பை நகரத்தார்கள் சங்கத்திலிருந்து திருப்பள்ளி எழுச்சியை நடத்துகிறார்கள்.

மகா நந்தி பூஜை :-

மார்கழிமாத இறுதியில் திருப்பள்ளி எழுச்சியின் முத்தாய்ப்பாக இவ்விழா நடைபெறுகிறது. இவ்விழாவினைச் செட்டியார் குலப்பெண்கள் பலரும் கூடிக் கடந்த சில ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள்.

சிறப்பு விழாக்கள் :-

நெற்குப்பையில் நடைபெறும் விழாக்களுக்குக் குறைவே இல்லை. கோயிலில்

அன்னாபிஷேகம், வருஷாபிஷேகம், சிவன்ராத்திரி ஆகிய பெருவிழாக்களும், பொங்கல், தீபாவளி போன்ற நாட்களில் அபிஷேக ஆராதனைகளும் நெற்குப்பை நகரத்தார் சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

5. திருக்கோயிலின் தனிச் சிறப்பு

சிவலிங்கம் :-

இக் கோயிலின் சுற்றுப்பிரகாரத்தில் காசி விசுவநாதரும், விசாலாட்சி அம்மையும் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றனர். காசி விசுவநாதராகிய இச்சிவலிங்கத்தை சிவாச்சாரியார் ஒருவர் வழிபட்டுவந்ததாகவும், பின்னர் இக்கோயில் கல்திருப்பணி செய்கின்ற காலத்தில் கொண்டுவந்து நிறுவியதாகவும் பெரியவர்கள் கூறுவர்.

லிங்கம் பலவகைப்படும். அவற்றில் 'பாணம்' என்பது ஒருவகை, பாணாசுரனால் உண்டாக்கப் பெற்று வழிபடப்பெற்ற லிங்கம் 'பாணம்' ஆகும். இத்தகைய லிங்கம் நர்மதை ஆற்றங்கரையிலிருந்து கொண்டு வரப் பெறுவதாகும். இந்த வகை லிங்கங்கள் ஸ்படிகக் கற்களால் அமைந்தவை. இத்தகைய லிங்கமே நெற்குப்பை நகர ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் சுற்றுப்பிரகாரத்தில் உள்ளது.

இந்த லிங்கத்தின் திருமேனியில் வடக்கிலும் மேற்கிலும், செந்நிற நீலநிற ரேகைகள் வளர்ச்சியுற்று வருவதைக் காணலாம். இந்த ரேகைகள் சிவலிங்க வடிவில் அமைந்து வளர்ந்து வருகின்றன. இதனை மக்கள் கண்டு வியப்படைந்து, பக்தியுடன் வணங்கி வருகின்றனர். தீப ஆராதனையின் பொழுது கற்பூர ஜோதி இச்சிவலிங்கத்தில் பிரதிபலிப்பதைக் காணலாம். ஈஸ்வரன் ஜோதிமயம் என்ற பேருண்மையையும் பக்தி உணர்ச்சியையும் அடியவர்பால் இஃது எழுப்புகிறது.

கும்பாபிசேகமும் திருப்பணியும் :-

கோயிலில் கும்பாபிசேகம் நடந்து பல ஆண்டுகள் ஆகியிருப்பதாலும், விமானங்களும் பதுமைகளும் பழுதுற்று இருப்பதாலும், அவற்றைப் புதுப்பித்து, மீண்டும் கும்பாபிசேகம் செய்வது நல்லது என நகரத்தார் கருதினர். அக் கருத்தைச் செயல்படுத்த நகரத்தார்களிடம் நன்கொடை வசூல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றன. நன்கொடை அளிப்பதற்கு நகரத்தார்கள் அனைவரும் ஆர்வத்துடன் முன்வந்து அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி சந்நிதானத்தில் தங்கள் நன்கொடைகளை வழங்கினர்.

மங்கள வருடம் ஆவணி மாதம் 17ம் நாள் (2-9-1977) வெள்ளிக்கிழமை ராஜகோபுரத்தின் ஈசானியத்தில் (வடகிழக்கில்) தச்சு செய்து திருப்பணி வேலைகள் தொடங்கப் பெற்றன. கோபுரப் பதுமைகளைக் கண்டரமாணிக்கம் T. நாராயண சாமி ஸ்தபதியும், அவர் தம்பி T. நாகலிங்கமும் மற்றும் அவர் குழுவினரும் அமைத்து வண்ணம் வைத்துத் தந்தனர்.

செ. மு. முத்துப்பழனியப்ப செட்டியார் அவர்களால் திருப்பணி வேலைகள் முழுநேரமும் மேற்பார்வை செய்யப் பெற்று முடிவுற்றன. அவர்கள் முயற்சி பாராட்டத்தக்கது.

நகரத்தார்கள் ஆர்வத்துடன் முருகன் சந்நிதானத்தில் தொடங்கிய தெய்வத்திருப்பணி மிகச் சிறப்பாக நிறைவெய்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.



இவ்வாறு காளயுக்தி வருடம் ஆவணி மாதம் 29 ம் நாள் (14-9-78) வியாழக்கிழமை, கும்பாபிசேகம் சிறப்புற நடைபெற்றது.

நகர ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருவருளால் நெற்குப்பை நகரத்தார் அனைவருக்கும் நகரத்தார் குலத்தினருக்கும் எல்லா நலன்களும் வளங்களும் உண்டாவதாக.

14-9-1978ல் நடைபெறும் கும்பாபிசேகத்திற்காகக் கோயிலில் செய்துள்ள திருப்பணிகள் :-

கோயில் கோபுரங்களில் உள்ள பொம்மைகள் பழுதுபட்டிருந்தன. பழைய பதுமைகள் இருந்த இடங்களில் எவ்வித மாற்றமும் இல்லாமல், பழைய பதுமைகளைப் போன்ற அமைப்புடைய புதுப்பொம்மைகள் செய்யப் பெற்றிருக்கின்றன. வண்ணங்களும் தீட்டப்பெற்றன.

சுப்பிரமணியர் சந்நிதிக்கு முன் உள்ள நுழைவாயிலின் மேல் மயில்மீதமர்ந்த முருகன் பதுமையும், மதிற்சுவரின் இரு பக்கங்களிலும் பார்வதி பரமசிவன், வள்ளி முருகன் பதுமைகளும் புதிதாக அமைக்கப் பெற்றுள்ளன. சண்முகர் உற்சவ விக்கிரக சந்நிதானத்தின் தென்புற நுழைவாயிலின் மேல் சுவாமிமலைக் காட்சி அமைக்கப் பெற்றுள்ளது.

சுற்றுப்பரிவார தேவதைகளுக்கும் சுவரினைச் சுற்றிலும் பளிங்குக்கல் பதிக்கப்பெற்றது. மடைப்பள்ளியும், கோயில் தென்புற மதிலையொட்டிய கூடமும் காங்ரீட் போடப்பெற்றுப் புதுப்பிக்கப்பெற்றன. கோயிலின் மேல்தளமும் புதுப்பிக்கப்பெற்றது.

சகடைகள் நிறுத்துவதற்குரிய இடமும் விரிவாக்கிப் புதிதாகச் கட்டப்பட்டுள்ளது.

ஓம் முருகா நியான் விளக்கு நெற்குப்பையில் பிறந்த நகரத்தார் பெண் மக்களின் சார்பில் அமைக்கப் பெற்றுள்ளது.

இவ்வூர் முரு. மு. முத்துராமன் செட்டியார் மகள் வேகுப்பட்டி சொ. பழ. தெய்வானை ஆச்சி ரிஷப வாகனம் ஒன்றும் சகடை ஒன்றும் ஏற்கனவே செய்து அளித்திருக்கிறார்கள்.

இராஜ கோபுரத்தின் தென் புறத்தில் பிள்ளையார்பட்டி மு. செ. முத்துப்பழநியப்ப செட்டியார் அவர்கள் பாலகணபதி கோயிலையும், இராஜகோபுரத்திற்கும் கடம்பன் சந்நிதிக்கும் இடையில் இளையாத்தங்குடிக் கழனிவாசல் பிரிவு பழ. பெரி. பெரி. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள் மனைவி மீனாட்சி ஆச்சி அவர்கள் பாலகுமரன் கோயிலையும் நிறுவியிருக்கிறார்கள். இதனைச் சேர்த்துக் கோயில் விமானங்களின் எண்ணிக்கை பதின்மூன்று ஆகும். இராஜகோபுரம் ஈடும் எடுப்புமாக முன்னின்று அழகுக்கு அழகு செய்கிறது.

இளையாத்தங்குடி கிங்கிணிக்கூர் ராம. சா. கரு. சுப்பையா செட்டியார் அவர்கள் நகரத்தார் சங்கத்துக்கு அன்பளிப்பாக ஒலி பெருக்கிக் கருவிகளை (ஆம்பிலிபையர் செட்) வழங்கியிருக்கிறார்கள்.

இக்கட்டுரையில் ஆறுமுகப் பெருமானின் திருவருட் சிறப்புப் போல, ஆறுவகையில் நலம் செழித்து வளம் கொழிக்கும் நம் நகரத் திருக்கோயிலின் வரலாற்றைக் கண்டோம்.

நெற்குப்பை என்ற பெயர் வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருத நிலத்தைக் குறிக்கும். தொல்காப்பியர் காலம்தொட்டு நெற்குப்பை என்ற சொல்லாட்சி இலக்கண நூல்களில் புணர்ச்சி

இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டப் பெற்று வருகிறது. இத்தகைய சீரும் சிறப்புமிக்க நகரப் பெரும்பகுதியில் இன்று சிவன்கோயில், நகரச்சுப்பிரமணியசுவாமிகோயில், வடக்குவாசல் செல்வி பிடாரி அம்மன்கோயில், சோணையன் கோயில், சேவுகப் பெருமாள் கோயில் பறியாமருந்தீசர் கோயில் அழகிய நாச்சியம்மன் கோயில், குருசாமிகோயில், ஐயனார் கோயில்கள், பிள்ளையார் கோயில்கள் பல விளங்குகின்றன.

தெய்வ அருள் சிறந்து நெற்குப்பை நகரம் சிறப்புற்றோங்கவும், நகரத்தார் இனம் செழிக்கவும், எல்லாரும் எல்லா நலமும் பெறவும் ‘எல்லாம் வல்ல இறையருள் பாலிக்க’ என வாழ்த்துவோமாக.

உ

சிவமயம்

நெற்குப்பையில் நித்திய கல்யாண சொரூபமாக வீற்றிருக்கும்
ஸ்ரீ வள்ளி தெய்வானை உடனாய் ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான்
திருவீதியுலாச் சென்று ஸ்ரீ மீனாட்சி திருக்கல்யாண மண்டபத்தில்
எதிர் சேவை அருளும்போது கூறப்படும்

கட்டியம்

(காவடிச் சிந்து மெட்டு)

1. சீர்வள ருங்கதிர் மாமலை மேவிய
செந்தமிழின் வாசா
செந்தமிழின் வாசா – இந்தப்
பாருலகத்தில் அடியவர் போற்றிடும் பாலகுமரேசா

2. வானவர் தானவர் மாமுனி வோர் தொழும்
வான் மயில் வாகனனே
வான் மயில் வாகனனே – தொந்தி
யானை முகனுக் கிளைய பராபரமாகிய வேலவனே

3. பச்சை மரகத மேனியுறும் வாலை
பார்வதி பாலகனே
பார்வதி பாலகனே–துய்ய
நச்சர வத்துயில் ராமன் மருமகனாகிய வேலவனே.



4. அசுரர்கள் தேகம் திடீர் திடீரென
அற்று விழத்தானே
அற்று விழத்தானே-அதிவீரமுள்ள வெற்றி
வேல்விட் டெறிந்ததோர் ஆறுமுகத்தோனே

5. கந்தா கடம்பா குகா ஞான சண்முகா
காலாயுதப் பொருளே
காலாயுதப் பொருளே-உன்னை வந்து பணிந்த
அடியவர்க்கு வரம் தந்திடும் மெய்ப்பொருளே,

6 வள்ளியைத் தேடி தினைப்புனம் தன்னிலே
வந்த தயாபரனே-மாதவள்
அள்ளிக் கொடுக்கும் தினைமாவை வாங்கி
அருந்தும் தயாபரனே:

7 தீராத கும்பிக்கு இரையது தேடியே
துன்பக் கடல்கடந்து- கரையேறி
உன்பாதம் பணிய வரமருள்
ஏழை தமக்குகந்து.

கட்டியம்

சண்டப் பிரசண்ட வீதண்ட மூதண்டகோ
தண்ட பாணிக்கு மருகன் சக்திமுன்
தத்திமித்தாள மோவொத்து நின்றாடிய
சதாசிவன் பெற்ற முருகன்
தண்டமிழ் நிறைந்திடும் அண்டரும் முனிவரும்
தாள்வணங்கிய வேலவன்
சாலோக சாமீப சாரூப சாயுச்சய
சகல மோட்ச அதிகார கர்த்தன்



அகோ தெப்படி யென்றால்

ஐங்கரற்கிளைய ஆறுமா முகவன்
ஈஸ்வரி புதல்வன் ஈராறு புயத்தோன்
வள்ளி தெய்வானை மனமகிழ் கொழுநன்
சேவற் கொடியோன் சிகி வாகனத்தோன்
கருணா கடாக்ஷ விட்சண்ணிய அலங்காரன்
உத்தண்ட மண்ட லீகரன்
மதன மோகன வசீகரன்
பஞ்ச பாண அவதாரன்
அஷ்ட ஐஸ்வரிய சம்பன்னன்
துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனன்
மந்தரமகா மாணிக்கம் மகுடாலங்காரன்
அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகன்
ஆபத் பாந்தவன் அனாதரட்சகன்

அண்ட பஹிரண்டமும் ஆயிரத்தெட்டு அண்டங்களும் இருநூற்று இருபத்துநாலு புவனங்களும் சப்தசாகரஞ்சூழ நின்ற ஈரேழுபதினாலு லோகமும் காக்கும் வேலையே கைக்கொண்டு ஏகசக்ராதிபத்தியஞ் செலுத்தி ஒப்பற்ற சந்திரவட்டக் குடையின் நீழலிருந்தாளப் பெற்ற சுப்பிரமணியக் கடவுள் அன்னதானம் முதல் பற்பல தானங்கள் செய்து இன்றைய தினம்.

பொற்குவை விளைதரு நெற்குப்பை எனும் இத்தலத்தில் நம்மை அனைவோரையும் அருள்புரிந்தென்றும் ஆள்கிறோம் என்றும் தீர்த்தப் பிரசாதம் திருநீறு கொடுத்து, தும்புரு நாரத தம்புரு இசைதர, தேவகணங்கள் தாமென ஒலிக்க, மங்கலப் பல்லாண்டு மறையோர் ஒத, பாவையராடப் பல்லியம் முழங்க, நாவலர் போற்ற நல்விருதுடனே குவலயம் புகழும் நெல்லையம்பதியில், சேந்தன், அமுதன், செவ்வேள், கார்த்திகேயன், பன்னிருகையன், பவளச் செவ்வாயன், பக்தர்கள் அருளும் தெண்டாயுதனாம் சிலம்பணி பாதன் பொன்னாற் செய்த புனித மண்டபத்தில் நவரத்தினமும் நனிபெற இழைத்த தமது ரத்தின சிம்மாசனக் கொலுவிற்கு எழுந்தருளி வருகின்றார், வெகுபறாக் எச்சரிக்கை.

சண்முகநாதன் திருவடி சரணம்.



நெற்குப்பை நகரத்தார் சங்கத்தின் கி.பி 1951 – 52 முதல் 2012 – 13 வரை நெற்குப்பை நகர ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலின் காரியக்காரர்களாக/ செயலாளர்களாகப் பணியாற்றியோர் பட்டியல்

வரிசை எண்.	செயலாளர்களின்பெயர்கள் (காரியக்காரர்கள்)	கோவில் (பிரிவு)	செயலாற்றிய ஆண்டு (கி.பி)
1.	முரு. பழ. மு. முரு. முருகப்பன் மு. ப. இராமநாதன்	இரணிக்கோவில் சூரக்குடி	1951 - 52
2.	ராம. சா. ராம. சாத்தப்பன் அழ. பழ. பழநியப்பன்	கிங்கிணிக்கூர் வயிரவன்கோவில்	1952 -53
3.	பழ. பெரி. பெரி. பெரியகருப்பன் மு. செ. மு. முத்தப்பன்	கழனிவாசல் பிள்ளையார்பட்டி	1953 -54
4.	ந. பழ. மு. பழ. முத்துப்பழநியப்பன் லெ. ராம. ராம. ராமநாதன்	இரணிக்கோவில் நேமம்	1954 -55
5.	பனை. சுப. சுப்ரமணியன் ப. அ. கரு. அண்ணாமலை	நேமம் மாத்தூர்	1955 -56
6.	முரு. பழ. பெரி. குமரப்பன் சுப. மு. முத்துராமன்	இரணிக்கோவில் கழநிவாசல்	1956 -57
7.	ராம. சா. கரு. இராமநாதன் அழ. பழ. பழநியப்பன்	கிங்கிணிக்கூர் வயிரவன்கோவில்	1957 -58
8.	பழ. பெரி. பெரியகருப்பன் மு. செ. மு. முத்தப்பன்	கழனிவாசல் பிள்ளையார்பட்டி	1958-59
9.	ந. பழ. ந. நல்லகருப்பன் ப. ராம. லெ. ராம. ப. லெட்சுமணன்	இரணிக்கோவில் நேமம்	1959-60
10.	கு. பழ. சு. பழ. சுப்பிரமணியன் ராம. பழ. பழநியப்பன்	நேமம் கோவில் மாத்தூர்	1960 - 61
11.	முரு. பழ. முரு. பழநியப்பன் சு. ராம. ராம. சுப்ரமணியன்	இரணிக்கோவில் சூரக்குடி	1961- 62
12.	ராம. சா. பழ. சொ. பழநியப்பன் அரு. அழ. அழகப்பன்	கிங்கிணிக்கூர் வயிரவன்கோவில்	1962 -63
13.	தெ. சு. மு. முத்துராமன் செ. மு. முத்தப்பன்	கழநிவாசல் பிள்ளையார்பட்டி	1963-64
14.	ந. பழ. மு. அ. ராமசாமி லெ. ப. ப. ராமநாதன்	வயிரவன்கோவில் நேமம்	1964-65



வரிசை எண்.	செயலாளர்களின் பெயர்கள் (காரியக்காரர்கள்)	கோவில் (பிரிவு)	செயலாற்றிய ஆண்டு (கி.பி)
15.	பழ. பனையப்பன் ப. அ. கரு. மாணிக்கம்	நேமம் மாத்தூர்	1965 -66
16.	துக. மு. மு. பெரியணண் முத்து. கும. சுப்ரமணியன்	ஓக்கூர் இரணிக்கோவில்	1966 - 67
17.	அழ. பழ. இராமசாமி சா. ராம. கரு. ராமநாதன்	வயிரவன்கோவில் கிங்கிணிக்கூர்	1967 - 68
18.	பழ. வெ. சுந்தரம் முத்து. மு. மு. தியாகராஜன்	பட்டிணசாமி இரணிக்கோவில்	1968 - 69
19.	பழ. பெரி. பெரி. ஆறுமுகம் செ. மு. முத்தப்பன்	கழநிவாசல் பிள்ளையார்பட்டி	1969 - 70
20.	பழ. ப. பனை. சுப்பையா பழ. இரா. சுப்ரமணியன்	நேமம் மாத்தூர்	1970 - 71
21.	முரு. பழ. மு. முத்துராமன் சு. ராம. சொ. சொக்கலிங்கம்	இரணிக்கோவில் சூரக்குடி	1971 - 72
22.	லெ. ப. பனை. அண்ணாமலை ந. பழ, பழநியப்பன்	நேமம் இரணிக்கோவில்	1972 - 73
23.	துக. மு. மு. பெரியணன் முத்து. கும. சுப்ரமணியன்	ஓக்கூர் இரணிக்கோவில்	1973 - 74
24.	ராம. சா. கரு. இராமநாதன் அழ. பழ. ராமசாமி	கிங்கிணிக்கூர் வயிரவன்கோவில்	1974 - 75
25.	மு. ராம. மு. மு. தியாகராஜன் பழ. வெ. சிங்காரம்	இரணிக்கோவில் பட்டினசாமி	1975 - 76
26.	சோம. பெரி. பெரியகருப்பன் மு. செ. முத்துப்பழநியப்பன்	கழநிவாசல் பிள்ளையார்பட்டி	1976 - 77
27.	கு. பழ. சு. பழ. சுப. சுப்ரமணியன் ப. அ. கரு. மாணிக்கம்	நேமம் மாத்தூர்	1977 - 78
28.	முரு. பழ. மு. சு. சிவ. அருணாசலம் ராம. சு. ராம. முத்துப்பழநியப்பன்	இரணிக்கோவில் சூரக்குடி	1978 - 79

வரிசை எண்.	செயலாளர்களின் பெயர்கள் (காரியக்காரர்கள்)	கோவில் (பிரிவு)	செயலாற்றிய ஆண்டு (கி.பி)
29.	ந. பழ. மு. ராம. சொக்கலிங்கம் ராம. லெ. இராமநாதன்	இரணிக்கோவில் நேமம்	1979 - 80
30.	மு. சுப்ரமணியன் பெரி. சிங்காரம்	இரணிக்கோவில் ஒக்கூர்	1980 - 81
31.	சா. பழ, சு. ராம. அருணாசலம் அழ. பழ. இராமசாமி	கிங்கிணிக்கூர் வயிரவன்கோவில்	1981 - 82
32.	மு. ராம. மு.மு. தியாகராஜன் பழ. பெரி. இராமநாதன்	இரணிக்கோவில் கழநிவாசல்	1982 - 83
33.	தெ. சொ. கிருஷ்ணன் செ. மு. முத்துப்பழநியப்பன்	கழநிவாசல் பிள்ளையார்பட்டி	1983 - 84
34.	பழ. பனை. சுப்பையா ப. அ, கரு. மாணிக்கம்	நேமம் மாத்தூர்	1984 - 85
35.	மு. கும. இராமநாதன் ராம. சு. முப. இராமநாதன்	இரணிக்கோவில் சூரக்குடி	1985 - 86
36.	லெ. ராம. ப. லெட்சுமணன் ந. பழ, ந. ப. பழ. சிவலிங்கம்	நேமம் இரணிக்கோவில்	1986 - 87
37.	மு. சுப்ரமணியன் துக. மு. மு. பெரி. சிங்காரம்	இரணிக்கோவில் ஒக்கூர்	1987 - 88
38.	ராம. வடு. இராமநாதன் அழ. பழ. இராமசாமி	கிங்கிணிக்கூர் வயிரவன்கோவில்	1988 - 89
39.	மு. ராம. மு. மு. தியாகராஜன் வெ. சிங்காரம்	இரணிக்கோவில் பட்டிணசாமி	1989 - 90
40.	சோம. சொ. ராமநாதன் பழ. சுப்பையா	கழநிவாசல் நேமம்	1990 - 91
41.	பழ. சிங்காரவடிவேல் பழ. ராம. சுப்ரமணியன்	நேமம் மாத்தூர்	1991 - 92
42.	முரு. பழ. முரு. சொ. சேதுராமன் ராம. ராம. திருநாவுக்கரசு	இரணிக்கோவில் சூரக்குடி	1992 - 93



வரிசை எண்.	செயலாளர்களின் பெயர்கள் (காரியக்காரர்கள்)	கோவில் (பிரிவு)	செயலாற்றிய ஆண்டு (கி.பி)
43.	ந. பழ. மு. லெ. மு.திருப்பதி லெ. ப. ப. இராமநாதன்	இரணிக்கோவில் நேமம்	1993 - 94
44.	சுப. தியாகராஜன் ந. அண்ணாமலை	இரணிக்கோவில் ஒக்கூர்	1994 - 95
45.	ராம. வடு. இராமநாதன் அழ. பழ. இராமசாமி	கிங்கிணிக்கூர் வயிரவன்கோவில்	1995 - 96
46.	பழ. வெ. சி. செல்வநாதன் மு. ராம. மு. மு. தி. தியாகராஜன்	பட்டிணசாமி இரணிக்கோவில்	1996 - 97
47.	தெ. சு. மு. சுப்ரமணியன் மு. செ. முத்துப்பழநியப்பன்	கழநிவாசல் பிள்ளையார்பட்டி	1997 - 98
48.	சுப. சபாரெத்தினம் (சுப்ரமணியன்) பழ. ராம. சுப்ரமணியன்	நேமம் மாத்தூர்	1998 - 99
49.	சே. மு. திருநாவுக்கரசு முரு. பழ. மு. முத்து. முருகப்பன்	சூரக்குடி இரணிக்கோவில்	99- 2000
50.	ந. பழ. சிவலிங்கம் லெ. ராம. ப. லெ. பனை. லெட்சுமணன்	இரணிக்கோவில் நேமம்	2000- 01
51.	ந. பழ. மு. ந. தி, கனகசபை லெ. ராம. ப. லெ. பனை. ராமநாதன்	இரணிக்கோவில் நேமம்	2001- 02
52.	சு. ப. ந. சுப்ரமணியன் மு. அ. ந. அண்ணாமலை	இரணிக்கோவில் ஒக்கூர்	2002- 03
53.	ந. பழ. சிவலிங்கம் பழ. பெரி. பழ. வயிரவன்	இரணிக்கோவில் கழநிவாசல்	2003- 04
54.	சுப. அ. பழ. அடைக்கப்பன் பழ. ராம. சுப்ரமணியன்	நேமம் மாத்தூர்	2004 - 05
55.	முரு. மு. சுப்பையா சா. சா. சுந்தரம்	இரணிக்கோவில் கிங்கிணிக்கூர்	2005 - 06
56.	மு, மு. ந. மு. தியாகராஜன் வெ. சி. செ. சிங்காரம்	இரணிக்கோவில் பட்டிணசாமி	2006 - 07

வரிசை எண்.	செயலாளர்களின் பெயர்கள் (காரியக்காரர்கள்)	கோவில் (பிரிவு)	செயலாற்றிய ஆண்டு (கி.பி)
57.	ராம. சுப. பழநியப்பன் மா. அருணாசலம்	கிங்கிணிக்கூருடையார் வயிரவன்கோவில்	2007-08
58.	மு. கும. ராமநாதன் மு. முத்துப்பழநியப்பன்	இரணிக்கோவில் சூரக்குடிக்கோவில்	2008-09
59.	தெ. அருணாசலம் கணேசன் பழ. மெய்யப்பன்	கழநிவாசல் பிள்ளையார்பட்டி	2009- 10
60.	சிவ. ரத்னசபாபதி ராம. லக்ஷ்மணன்	இரணிக்கோவில் நேமம்கோவில்	2010 - 11
61.	ந. பழனியப்பன் சி. காந்தி	இரணிக்கோவில் இ. ஒக்கூர்	2011 - 12
62.	மு. சுப. சாத்தப்பன் சோம. பழ. அழகப்பன்	இ. கழநிவாசல் இரணிக்கோவில்	2012 - 13



